
# அறநெறி அமுதம்

ஆன்மீக விழுமியக் காலாண்டிதழ் – 53

தை – பங்குனி 2014

## சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்த ஆண்டு நிறைவு




**இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை**

**40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு – 06**

அமுதம் 14 துளி 1

வலிமையோடு இருங்கள், மூடக்கொள்கையை உதறித் தள்ளுங்கள். எனக்கு வயது ஏற ஏற, எல்லாமே **ஆண்மை** என்ற ஒன்றில் அடங்கியிருப்பதாகக் காண்கிறேன். இதுவே நான் தரும் புதிய வேதம். வலிமை, அளவற்ற வலிமை -இதுவே நமக்கு இப்போது தேவை என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

## வலிமை! வலிமை! வலிமை!

உணவு, வாழ்க்கை முறை, எண்ணம், மொழி ஆகிய அனைத்திலும் ஆற்றல் பொங்கித் ததும்பி நிரம்பி வழியவேண்டும். எல்லாத் துறைகளிலும் உயிர்ச்சக்தியைப் பாய்ச்சினால், நமது நாடி நரம்புகளில் எல்லாம் இரத்தம் பரவி, எல்லாச் செயல்களிலும் உற்சாகமும் புத்துணர்ச்சியும் உண்டாகும். அதன் மூலம் இந்த நாட்டு மக்கள் விழிப்படைந்து வாழ்க்கையின் இன்னல், இடுக்கண் முதலியவற்றிலிருந்து விடுபடுவார்கள். இல்லாமல் போனால், இந்த நாட்டு மக்கள் விரைவில் அழிவு எய்தி மறைந்து போய்விடுவார்கள்.

உடலிலும் மனதிலும் வலிமை இல்லாமல் போனால் ஆன்மாவை அடைய முடியாது. முதலில் நல்ல சத்தான உணவைச் சாப்பிட்டு உடலை வலிமைப்படுத்திக்கொள். அதன் பிறகே மனம் வலிமை அடையும். "நான் தாழ்ந்தவன், நான் தாழ்ந்தவன்" என்று திரும்பத் திரும்ப நினைப்பது ஒருவனை இழிவுபடுத்தி நாசமாக்கிவிடுகிறது. நீ உன்னைப் பலவீனன் என்று ஒரு போதும் சொல்லாதே. எழுந்து நில்! தைரியமாக இரு; வலிமையுடன் இரு; பொறுப்பு முழுவதையும் உன் தோள்மீதே சுமந்துகொள். உன் விதியைப் படைப்பவன் நீயே என்பதை அறிந்து கொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றது.

எல்லாவற்றிற்கும் மற்றவர்களை எதிர்பார்ப்பது நல்லதல்ல. உடலை வலிமையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை மக்கள் அறிந்து கொள்ளும்படி செய்தால், பிறகு அவர்களே அதைச் செய்து கொள்வார்கள். உங்களைச் சிறுவயதிலேயே வலிமை உடையவர்களாக ஆக்குங்கள். வலிமை, ஆண்மை, தேஜஸ் - இவையே இப்போது நமக்கு வேண்டும்.

***-சுவாமி விவேகானந்தர்***

தொகுப்பு: ஜெ. அபராஜிதன்
தரம் 11, இராமகிருஷ்ணமிஷன் சமய பாடசாலை

# பிரார்த்தனை



ஸூர்யோ யதாந்தம் ஹி தமோ நிஹந்தி விஷ்ணுர்யதா துஷ்ட-ஜனான் சினத்தி ।
ததைவ யஸ்யாகில-நேத்ர-லோபம் ரூபம் த்ரிதாபம் விமுகீ-கரோதி ॥

தம் தேசிகேந்த்ரம் பரமம் பவித்ரம் விச்வஸ்ய பாலம் மதுரம் யதீந்த்ரம் ।
ஹிதாய ந்ருணாம் நரமூர்த்திமந்தம் விவேக ஆனந்தம் அஹம் நமாமி ॥

**-விவேகானந்தர் துதி**

**பொருள்:** கதிரவன் எவ்வாறு காரிருளைப் போக்குகிறானோ, விஷ்ணு எவ்வாறு துஷ்டர்களை அழிக்கிறாரோ, அதுபோல், யாருடைய திருவுருவம் உலகின் எல்லாக் கண்களையும் கவர்ந்து, மூவகைத் துன்பங்களையும் போக்குகிறதோ, ஆசாரியார்களில் தலைசிறந்தவரும், மேலானவரும், புனிதமானவரும், உலகால் வணங்கப்படுபவரும், இனிமையானவரும், துறவி வேந்தரும், உலக நன்மைக்காக மனித வடிவம் தாங்கியவருமாகிய அந்த விவேகானந்தரை நான் வணங்குகிறேன்.

செங்கதிர் உதய காலைச் சிறை விரி கரிய வண்டு
இங்கிதமாகப் பாடி இனிய தேன் நுகர்தல்போல
எங்குரு விவேகானந்த இரவியின் உதயம் கண்டு
அங்கமே புளகமாகி அவன் புகழ் பாடுவோமே!

**இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.**
**40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06.**

## இந்த இதழில்...


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | பிரார்த்தனை | 1 |
| 2. | இதழாசிரியர்களிடமிருந்து... | 3 |
| 3. | கவிதை | 4 |
| 4. | பாப்பா பாப்பா கதை கேளு | 5 |
| 5. | மாண்டூக்கிய உபநிடதம் | 7 |
| 6. | புண்ணிய நதிகள் | 9 |
| 7. | இந்து மதம் | 12 |
| 8. | விவேகானந்த வீரியம் | 14 |
| 9. | பஞ்சதந்திரக்கதை | 15 |
| 10. | நீங்களும் எழுதலாம் | 16 |
| 11. | சாதனையாளர் | 17 |
| 12. | கலியுக கற்பகதரு | 21 |
| 13. | யோகம் | 25 |
| 14. | கடந்த இதழின் குறுக்கெழுத்துப் போட்டி விடைகள் | 27 |
| 15. | படக்கதை | 28 |
| 16. | சுவாமி விவேகானந்தரின் வாழ்வில் பரமஹம்சர் | 30 |
| 17. | புராணச் சிறுவர் | 33 |
| 18. | பெண்ணே நீ மகத்தானவள் | 35 |
| 19. | நீங்கள் சிங்கங்கள் | 39 |
| 20. | இந்துவின் வாழ்க்கை இலட்சியம் | 41 |
| 21. | இலங்கையில் சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்த ஆண்டு சிறப்பு நிகழ்ச்சிகள் | 45 |
| 22. | செய்திகள் | 46 |
| 23. | உங்கள் கருத்து | 48 |

## இதழாசிரியர்களிடமிருந்து...

அன்பார்ந்த வாசகர்களுக்கு இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

'எப்போதெல்லாம் தர்மம் குன்றி அதர்மம் தலைத்தோங்குகிறதோ அப்போதெல்லாம் நான் அவதரித்து தர்மத்தை நிலைநாட்டுகிறேன்' என்று கீதையில் கூறினார் கண்ணபிரான். அதற்கேற்றாற்போல் உலக மக்கள், வாழ்வின் அடிப்படையான ஆன்மீகத்தின் மகிமையை மறந்து புலன்களால் உணரக்கூடிய உலக இன்பங்களே சிறந்தவை என மதி மயங்கிய காலத்தில் உண்மையான ஆன்மீத்தின் உன்னதத்தை உலகறியச் செய்வதற்காக அவதரித்தார் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர். அவரது அவதார நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அவதரித்தவரே சுவாமி விவேகானந்தர்.

அற்புத குருவான இராமகிருஷ்ணர் தன் அருமைச் சீடரான விவேகானந்தரை ஆன்மீக சாகரமாய் உருவாக்கினார். அந்தச் சாகரம் இந்தியாவில் இமயம்முதல் கன்னியாகுமரிவரை பாய்ந்து இந்துக்களின் நிலையைக் கண்டுணர்ந்தது. கன்னியாகுமரியில் தன் பணி குறித்துச் சிந்தித்த விவேகானந்தர் நவீன உலகிற்குத் தேவையான விதத்தில் புராதன ஆன்மீகத்தைப் புதிய விதத்தில் வழங்கினார். சூறாவளித் துறவியாக உலகெங்கும் வலம் வந்து அவர் ஆற்றிய உரைகள், வீர முழக்கங்களாகி, நடைபிணங்களாய்த் திரிந்த இளைஞருக்கு மின்சாரத்தைப்போன்ற சக்தியைப் பாய்ச்சின.

ஆன்மீகம் முதல் சமுதாயச் சிந்தனைகள்வரை அவர் கூறிய கருத்துக்கள் தற்காலத்திற்குத் தேவையான புரட்சி. 'சொந்த முக்தியும் உலக நன்மையும்' என்ற தாரக மந்திரத்தை இளைஞருக்கு வழங்கி, உலகத்திற்கு நன்மை செய்வதன் மூலம் எவ்வாறு சொந்த முக்தியைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற புதிய வழியைக் காட்டி உலக குருவாகினார் விவேகானந்தர். அவர் காட்டிய வழியில் மாணவர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு வெளிவரும் அறநெறி அமுதம் இம்முறை சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினத்தில் (ஆங்கிலத் திகதி- ஜனவரி 12) அவரது 150ஆவது பிறந்ததின நிகழ்வுகளின் நிறைவாக சிறப்பிதழாய் வெளிவருகிறது. இத்துளியை தெய்வத்திருமூவரின் பாதகமலங்களில் சமர்ப்பிக்கிறோம்.

# அண்ணல் சுவாமி விவேகானந்தர்

சுடரெனவே சூழ்ந்திடும் சோதி வட்டம்
சுட்டநற் பாலைப்போன்ற தூய சித்தம்!
மூடர்க்காய், முக்தியும் தூர பட்சம்
மூட்டும்செந் தீயைப்போன்று பாயும் ரத்தம்!

அன்பினையே அடித்தளமாய் அமைத்த பாதை!
அண்டத்தில் அடியோடு அகற்றும் தீதை!
புண்பட்ட புல்லுக்கும் புகலிடமான மேதை!
புதுவேகம் புனைந்தது புதிய கீதை!

கண்முன்னே பதிகின்ற காட்சி கண்டு,
கண்ணீரை உதிர்த்தே களைக்கும் விழிகள்!
கணமேனும் ஓயாது விழையும் தொண்டு,
கணந்தோறும் தேயாது காக்கும் மொழிகள்!

அச்சமது இன்னதென்று அறியா உள்ளம்!
அனல்கொண்ட அரியினுள்ளம் அன்பு வெள்ளம்!
அடுத்தவர்க்காய் மின்னுகின்ற வாழ்வின் வண்ணம்!
அண்ணலே, அரியபேற்றை அடைவது திண்ணம்!



ஆக்கம்: ச. துளக்சன்
பழைய மாணவன் (தன்னார்வத் தொண்டர்)
இராமகிருஷ்ணமிஷன் சமய பாடசாலை

# பாப்பா பாப்பா கதை கேளு

## நல்ல நட்பு

மாமரம் ஒன்றில் வசித்து வந்த கிளி தினமும் மாலை வேளையில் அழகாகப் பாட்டுப் பாடும். கிளியின் பாடலை மாமரம் விரும்பிக் கேட்கும். ஒருநாள் மாலையில் அந்த மாமரத்திற்கு அருகில் ஒரு முனிவர் வந்தார். அடர்த்தியாக இருக்கும் அந்த மாமரத்தைப் பார்த்ததும் அமைதியான இந்த மரத்தின்கீழ் அமர்ந்தபடி தவம் செய்யலாம் என்று முடிவு செய்தார். உடனே அமைதியுடன் அந்த மாமரத்தடியில் அமர்ந்து கொண்டார். தன் கண்களை மூடியபடி ஆழ்ந்த தவத்திற்குத் தயாரானார்.

அப்போது அங்கு வந்த கிளி மாமரத்தைப் பார்த்து, "மரமே! என் பாட்டைத் துவங்கலாமா?" என்று கேட்டது. ஒரு நிமிடம் யோசனையில் இருந்த மாமரம் கிளியைப் பார்த்து, "கிளியே! இப்போது நீ பாட்டுப்பாட வேண்டாம். அமைதியாக இரு" என்றது. இதனைக் கேட்ட கிளி திடுக்கிட்டது. "மரமே! என் பாட்டைக் கேளாமல் நீ ஒரு நாள் கூட இருக்க மாட்டாயே. இப்போது எதற்காக என் பாடலை வேண்டாம் என்கிறாய்? ஒரு வேளை நான் பாடுகின்ற பாடல் உனக்குப் பிடிக்கவில்லையா?" என்று வியப்போடு கேட்டது.



உடனே மரம், "கிளியே! என் அடியில் இருக்கின்ற முனிவரைக் கவனித்தாயா? அவர் உணவு, தண்ணீர், தூக்கம் எல்லாவற்றையும் மறந்து தவம் செய்து கொண்டிருக்கிறார். நீ பாட ஆரம்பித்துவிட்டால் அவரது தவம் கலைந்துவிடும். அதனால் பாடுவதை நிறுத்திக் கொண்டு அமைதியாக இரு. அவர் எப்போது இந்த மரத்தைவிட்டு எழுந்து செல்கின்றாரோ அப்போது உன் பாடலைப் பாடு" என்றது மாமரம்.



“மரமே! உன்னிடத்தில் தங்க வேண்டி அடைக்கலம் தேடினேன். நீ எனக்கு அடைக்கலம் கொடுத்தாய். எனவே உன்னுடைய பேச்சினை நான் மீறமாட்டேன்” என்றது கிளி. மரமும் கிளியும் பேசியது மரத்தடியில் இருந்த முனிவரின் காதுகளில் விழுந்தது. மரத்தையும், கிளியையும் பார்த்து அவர் வியப்புற்றார். உடனே மரத்தடியை விட்டு எழுந்துகொண்டார். மரத்தை அண்ணார்ந்து பார்த்த முனிவர், “மரமே! கிளியே! எனக்காக உங்கள் சந்தோஷத்தை இழக்க முன் வந்த உங்களுக்கு நான் எது வேண்டுமானாலும் கொடுக்கத் தாயாராக இருக்கிறேன். என்ன வரம் வேண்டும்?” என்று கேட்டார்.

உடனே மாமரம், “முனிவரே வணக்கம்! தாங்கள் எங்கள் மீது அன்பும், கருணையும் காட்டியதற்கு மகிழ்ச்சியினைத் தெரிவித்துக் கொள்கிறோம். நாங்கள் எப்போதுமே இப்படி ஒற்றுமையுடனும் மகிழ்ச்சியுடனும் இருக்கின்ற வரம் வேண்டும்” என்றது. உடனே முனிவர் கிளியைப் பார்த்து “கிளியே! நீ என்ன வரம் கேட்கப் போகிறாய்?” என்று கேட்டார். “ஐயா! மாமரம்தான் நான் கேட்க நினைத்த வரத்தைக் கேட்டுவிட்டதே” என்று கூறியது கிளி.



அதனைக் கேட்டு மனம் மகிழ்ந்த முனிவர், “நீங்கள் இருவரும் நட்புக்கு இலக்கணமாகத் திகழ்கின்றீர்கள். எனவே உங்கள் நட்பானது நன்கு வளரட்டும். ஒற்றுமையுடன் திகழட்டும்” என்று வாழ்த்தியபடி சென்றார். ஒற்றுமையான நட்பைவிட மேலான வரம் ஏது? நாமும் எம் நண்பர்களுடன் ஒற்றுமையாய் இருந்து மகிழ்வாய் வாழ்வோம்.

தொகுப்பு: க. கலைவாணி
பழைய மாணவி (தொண்டராசிரியை), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# மாண்டூக்கிய உபநிடதம்

சென்ற இதழில் முண்டக உபநிடதத்தைப் பற்றிப் பார்த்தோம். இவ்விதழில் மாண்டூக்கிய உபநிடத்தின் மீது கவனத்தைச் செலுத்துவோம். வாசகர்களாகிய உங்களுக்கு விளங்கக் கூடிய விதத்தில் இவ் உபநிடதத்தை மிகவும் சுருக்கமாக நோக்குவோம்.

அதர்வண வேதத்தைச் சேர்ந்த உபநிடதமான மாண்டூக்ய உபநிடதத்திற்கு இப்பெயர் வர இரு காரணிகள் இருந்திருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

1. இவ் உபநிடதத்தை அருளிய முனிவரின் பெயராக இருக்கலாம்.



2. மாண்டூகம் என்றால் தவளை. விழிப்பு, கனவு, தூக்கம் என்ற மூன்று நிலைகளில் நாம் மாறி மாறிச் சஞ்சரிப்பதால் எம் மனம் தவளைபோல் தாவிக் குதிப்பதாகக் கொண்டு இப் பெயர் வழங்கி இருக்கலாம்.

ஓங்காரத்திலிருந்து தன் பார்வையைத் தொடங்குகிறார் உபநிடத ரிஷி. படைப்பாக இருப்பது ஓங்காரம். இது பிரணவமந்திரம், சப்தப்பிரம்மம், நாதப்பிரம்மம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. உலகம் படைக்கப்பட்ட போது முதலில் எழுந்தது ஓங்காரத் த்வனியே. அதில் இருந்தே உலகமும் அண்ட சராசரங்களும் தோன்றியதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. **'கலைமகள் வீணை வாசிக்க அந்த நாதத்தில் இருந்து அண்டசராசரங்கள் பிறப்பதாக பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் தம் தெய்வீகக்காட்சி ஒன்றில் கண்டுள்ளார்.'**






படைப்பின் ஆரம்பம் முதல் இன்று வரை இந்த ஓங்காரநாதம் எங்கும் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் யோகிகளால் இதனைக் கேட்கமுடியும் என்றும் கூறப்படுகிறது. யாராலும் எழுப்பப்படாததால் இது **அநாஹதத்வனி** எனப்படுகிறது.

எதிலிருந்து ஒருபொருள் தோன்றுகிறதோ, அதன் தன்மை அந்தப் பொருளில் இருக்கும். இறைவனிலிருந்து தோன்றிய உலகமும் இறையம்சம் உடையதாகவே இருக்கும்.

எங்கும் நிறைந்த இறைவன் நம்மில் பிரகாசிக்கும் போது ஆன்மா எனப்பெயர் பெறுகிறார். ஜீவன் நான்கு பரிமாணங்களைக் கொண்டது. அவையாவன:



1. வைசுவானரன் (விழிப்புநிலை)

2. தைஜஸன் (கனவுநிலை)

3. பிராஜ்ஞன் (தூக்கநிலை)

4. ஆன்மா

ஆன்மாவானது நான்காம் பரிமாணம் என்று கூறப்பட்டாலும், உண்மையில் முதல் மூன்று பரிமாணங்கள் சேர்ந்ததும் அதே வேளையில் அவற்றைக் கடந்ததுமான செயல்பாடுகளிலும் ஆன்மாவே அடிப்படையாக உள்ளது.
ஓங்காரமந்திரத்தை இரண்டுகோணங்களில் காண்கிறது இந்த உபநிடதம்:

1. அனைத்தின் மொத்தமாகவும் காலங்களைக் கடந்ததாகவும் உள்ளது.

2. அ,உ,ம் என்ற மூவெழுத்துச் சேர்க்கையால் அமைந்தது.

இந்த மூன்று பரிமாணங்கள் எப்படி ஓங்காரமந்திரத்துடன் பொருந்துகிறது எனப்பார்ப்போம்.

**அ - வைசுவானரன் (விழிப்புநிலை)**

நிறையும் தன்மை, ஆரம்பத்தன்மை.

**உ - தைஜஸன் (கனவுநிலை)**

உயர்வு, நடுவில் உள்ளமையால் இரண்டுடனும் தொடர்பு

**ம் - பிராஜ்ஞன் (தூக்கநிலை)**

அளவிடும் தன்மை, கிரகிக்கும் தன்மை.

சொற்களால் விளக்கமுடியாத பகுதியாக அமைந்துள்ளது நான்காம் பகுதி ஆன்மா. அ,உ,ம், அமைதி நிலை இவை அனைத்தும் சேர்ந்ததே ஓங்கார மந்திரம்.

-ஆக்கம்: ஜெ. காயத்திரி

தரம் 10, இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை


# புண்ணிய நதிகள்



யமுனை - பாகம் I

புண்ணிய பாரதத்தின் ஏழு புனித நதிகளில் கங்கைக்கு அடுத்த நதியாக யமுனை கருதப்படுகிறது. ஆனால் கங்கை அவதரிப்-பதற்குப் பல யுகங்களுக்கு முன்பே யமுனை தோன்றி விட்டாள். வராக கல்பத்தில் சத்திய யுக ஆரம்பத்தில் அதாவது 300,000 ஆண்டுகளுக்கு முன்பே யமுனை தோன்றிவிட்டாள் என்பது பல நிபுணர்களின் முடிவாகும்.

இப் புனித நதியின் விபரங்களைப் பல புராணங்களில் காண முடிகிறது. முக்கியமாக, பிரம்மபுராணம், பவிஷ்யபுராணம், ஸ்கந்தபுராணம் என்பவற்றிலும் பாகவதம் முதலிய அரிய நூல்களிலும் யமுனையைப் பற்றி சில பெருங் கதைகளையும், பல சிறு கதைகளையும் காண முடிகிறது. அவற்றில் சிலவற்றைப் பற்றி நோக்குவோமாக.



சூரிய பகவான்

மகரிஷி காசியப்பருக்கும் அவரது தர்மபத்தினி அதிதிக்கும் பன்னிரண்டு பிள்ளைகள் பிறந்தனர். இவர்கள் முறையே விவஸ்வான், ஆரியமா, பூஷா, த்வஷ்டா, சவிதா, பகன், தாதா, விதாதா, வருணன், மித்ரன், சுக்ரன், உக்கிரமன் என்பவராவர். இவர்கள் அதிதியின் புத்திரர்கள் ஆதலால் 'துவாதச - ஆதித்தர்' எனப்பட்டனர். ('துவ' என்றால் இரண்டு, 'தச' என்றால் பத்து. துவாதச = பன்னிரண்டு). இவர்கள் பன்னிருவரும் சூரியர்களேயாவர். இறைவனின் ஆணைப்படி இவர்கள் மாதம் ஒருவராய்த் தோன்றி

இவ் வையத்து இருளைப் போக்குவர். எனினும் மூத்தவரான விவஸ்வானே நவக்கிரகங்களில் பிரதானமாக மதிக்கப்படுபவர் ஆவார். இவரையே நாம் கண்கண்ட தெய்வமான சூரிய பகவானாக வழிபடுகின்றோம்.

சூரிய பகவான் விஸ்வகர்மாவின் மகளான ஸஞ்சனாவைத் திருமணம் புரிந்தார். இவர்களுக்கு முதலில் வைவஸ்தவமனு என்ற மகனும் பின்பு யம் (ஆண்), யமி (பெண்) எனும் இரட்டைக் குழந்தைகளும் பிறந்தனர். கொடிய வெப்பத்தையும், கண்களைக் கூச வைக்கக்கூடிய பிரகாசத்தையும் உடைய சூரிய பகவானோடு ஸஞ்சனாவால் அதிக காலம் வாழ முடியவில்லை. இதனால் தனது அம்சம் கொண்ட சாயாதேவி என்ற ஒரு பெண்ணை உருவாக்கி, அவளிடம் தனது மூன்று குழந்தைகளையும் ஒப்படைத்துவிட்டு, தான் குதிரையாக மாறினாள். பின் தற்கால 'ஹரியானா'வாகிய குருப்பிரதேச ஆரண்யத்திற்குத் தவம் செய்யச் சென்றுவிட்டாள். பின்னர் சூரிய பகவானுக்கும் அவரது இரண்டாம் தாரமான சாயாதேவிக்கும் சாவர்ணிமனு, சனி என்ற இரு புதல்வர்களும் தப்தி என்ற மகளும் பிறந்தனர்.



ஸஞ்சனா, சாயா சமேதராக
சூரிய பகவான்

சாயாதேவி தனது மூத்தாளின் குழந்தைகளான யம், யமியிடம் பாரபட்சமாகவும் கடுமையாகவும் நடந்து கொண்டாள். யம், யமி இருவரும் சாயாதேவி செய்யும் மாற்றான் தாய்க் கொடுமைகளையும் அதனால் தாங்கள் அனுபவிக்கும் கொடுமைகளையும் துயரங்களையும் சூரிய பகவானுக்கு எடுத்துரைத்தனர். சூரியனும் கடும் கோபம் அடைந்து சாயாதேவியைக் கண்டித்தார்.

ஆனாலும் அவள் திருந்தவே இல்லை. சாயாதேவியின் கொடூரத்தைத் தாங்க முடியாமல் யம், யமி இருவரும் அவளுடன் உக்கிரமாகச் சண்டை இட்டனர். இறுதியில் கடும் கோபம் கொண்ட யம் தனது காலால் சாயாதேவியை ஓங்கி உதைத்தான். இதனால் துடிதுடித்த சாயாதேவி கண்ணீர் விட்டு அழுதாள். இதைப் பார்த்த யமி சந்தோஷத்தால் கலகல எனச் சிரித்துப் பரி-காசம் செய்தாள்.

கோபமடைந்த சாயாதேவி "உதைத்த உனது கால் உடைந்து போகட்டும்" என்று சாபம் இட்டாள். அது போல் 'யம்'இன் கால் முறிந்துவிட்டது. பாவம் யம்! முறிந்த காலுடன் வாரணாசி சென்று ஈஸ்வரனை நோக்கிக் கடும் தவமியற்றினான். இறைவனும் அவனது தவத்தை மெச்சி அருள்புரிந்தார். இறைவனருளால் யம், யமனாக மாறித் தென்திசைக் காவலனாக மயமஸனி என்ற உலகத்திற்கு அதிபதியானான். அத்துடன் உலகிலுள்ள உயிர்களை அவைகள் புரிந்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப அவர்களது கால முடிவில் உயிர்களைக் கவரும் காலக் கடவுளாக ஈசனால் நியமனம் பெற்றான். இதனால் அவனுக்குக் காலன் என்று பெயர் ஏற்பட்டது.



சாயாதேவி தன்னைப் பார்த்துச் சிரித்த யமியையும் விட்டு வைக்கவில்லை. "நான் கண்ணீர் விடுவதைக் கண்டு கலகல எனச் சிரித்துப் பரிகாசம் செய்த நீ கரடுமுரடான கஷ்டமான மலைப் பிரதேசங்களிலும் காடுகளிலும் சலசல எனச் சப்தமிட்டுப் பாயும் ஆறாகப் போவாயாக!" என்று சாபமிட்டாள். அவ்வாறு நதியாக மாறிய யமியே யமுனையாகத் தோன்றினாள்.

ஆக்கம்: சோ. பிரசோபிதா
பழைய மாணவி (தொண்டராசிரியை), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# இந்து மதம்

முழங்கு கடல் கடந்து சென்ற முதல் துறவி - இந்துமதம்
வழங்கியதோர் அருளமுதம்; வங்கத்தின் ஒளிவைரம்



ஆம்! அந்த வீரத்துறவி விவேகானந்தரின் பெயரால் வாசகர்களுக்கு வணக்கம் கூறி, "தொன்று பிறந்ததனைத்தும் அறிந்திடும் சூழ்கலை வாணர்களும் இவள் என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளாம் எங்கள் தாய்" என்று வியந்து நிற்கும் எமது இந்து சமயத்தின் பெருமை கூற இங்கு நான் விழைகின்றேன்.

வரலாறும் துணை செய்ய வழியில்லாமல் தவிக்கின்ற காலந்தொட்டு, இன்றுவரை நின்று வியாபித்திருக்கும் மதம்தான் இந்து மதம். அதன் வழி பின்பற்றுபவர்கள்தான் இந்துக்கள். 'மனிதன் என்பவன் நடமாடும் தெய்வமேயாவான். ஒவ்வொரு மனிதனுள்ளும் உறைவது சர்வ சக்தி வாய்ந்த ஓரே ஆன்மாதான். வேறுபாடுகள் எல்லாம் புற உடலளவிலும் ஒவ்வொருவரதும் மனப்பாங்கின் அடிப்படையிலும் மட்டுமேதான் காணப்படுகின்றன. எனவே மனிதனை மனிதன் நேசித்து சேவை செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே உதவி செய்து கொள்கிறான்' என்ற ஒப்பற்ற கோட்பாட்டை இடித்துரைப்பது எமது இந்து சமயம்தான்.

டார்வினின் பரிணாமக் கொள்கையிலிருந்து ஜன்ஸ்டீனின் சார்பியல் கொள்கை, குவாண்டம் பௌதிகவியல் (Quantum Physics) என்று விரியும் அனைத்து அறிவியல் ஆழங்களையும் தனது கோட்பாடுகளாலும் கொள்கைகளாலும் இட்டு நிரப்பக்கூடிய வல்லமை பெற்றது எமது இந்து சமயம்.

“இறைவன் ஒருவனே! அவனைப் பல பெயர்களால் அழைக்கின்றோம்” என்ற ஒருமைக் கோட்பாட்டை, உன்னத கருத்தை, உலகம் எங்கும் ஒலிக்கச் செய்தது இந்து சமயம். காலத்தால் கரையாத, ஞானத்தில் அழியாத வேதாந்தக் கருத்துக்களின் விளை நிலமான இந்து மதத்தை, உழுது பயிரிடத்தக்க வள நிலமாக மாற்றிய பெருமை எமது வீர விவேகானந்தரையே சாரும்.

இந்துக்களாகிய நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று வீரத்துறவி விவேகானந்தர் சொன்ன சாரத்தைப் பாருங்கள்.



“எப்போது ‘இந்து’ என்ற சொல் உங்களுள் வலிமையான மின்னதிர்வுகளைப் பரப்புமோ, அப்போது மட்டுமே நீங்கள் இந்துக்கள் ஆவீர்கள். எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எம் மொழியில் பேசினாலும், வேறு எந்த மொழியில் பேசினாலும், இந்து என்ற பெயரைத் தாங்கியவர்களாக இருந்தால், அவர்கள் ஒவ்வொருவரும் உங்களுக்கு மிக நெருங்கியவர்களாக, மிகுந்த அன்பிற்குரியவர்களாக என்று தோன்றுகிறதோ, அன்று தான் நீங்கள் இந்துக்கள் ஆவீர்கள். ‘இந்து’ என்ற பெயரைத் தாங்கிய யார் துன்பப்பட்டாலும் அந்தத் துன்பம் இதயத்தில் நுழைந்து, உங்கள் சொந்த மகனின் துன்பத்தைப் போல் உங்களைத் துடிக்கச் செய்யுமானால் அப்போது, அப்போது மட்டுமே நீங்கள் இந்துக்கள் ஆவீர்கள்” என்று முழங்குகிறார்.

அவர் மேலும் என்ன சொல்கிறார்?

“இதோ நான் இருக்கிறேன். இந்து இனத்தின் மிகச் சாதாரணமானவன் நான் என்றாலும் என் இனத்தைப் பற்றியும் என் முன்னோர்களைப் பற்றியும் பெருமைப்படுகிறேன். என்னை ஓர் இந்து என்று அழைத்துக் கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். உங்கள் தகுதியில்லாத வேலைக்காரர்களுள் ஒருவன் என்பதில் பெருமைப்படுகிறேன். நீங்கள் மகான்களின் வழி வந்தவர்கள். இந்த உலகம் இதுவரை கண்டவர்களுள் மாபெரும் ரிஷிகளின் வழித்தோன்றல்கள். எனவே உங்களிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். உங்கள் முன்னோர்கள் குறித்து பெருமைப்படுங்கள்” என்று முழங்குகிறார் அவர்.

ஆக்கம்: அ. ஹரீசன்
பழைய மாணவன், இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# விவேகானந்த வீரியம்

மனிதனுள் ஏற்கனவே புதைந்துள்ள தெய்வீகத்தை வெளிப்படுத்துவதே மதம் என முழங்கினார் சுவாமி விவேகானந்தர். அந்த தெய்வீகத் தன்மையைத் தமது அன்றாட வாழ்வின் ஒவ்வோர் அசைவிலும் வெளிப்பட்டுத் துலங்கச் செய்வதே மதத்தின் அடிப்படைச் சாராம்சம் என்பது சுவாமிஜியின் கருத்து. தியாகமும் சேவையும் இரு கண்கள் என மொழிந்தார் சுவாமிஜி. மனிதர்களின் இதயக்குகையே இறைவன் வாழும் ஆலயம் என்பது சுவாமி விவேகானந்தரின் ஆணித்தரமான கருத்து. அந்த இறைவனை மானுட சேவையின் மூலம் பூஜிப்பதே மிகப் பெரிய வழிபாடு என்றார் சுவாமிஜி. எனவே அந்த இறைவனைப் பூஜிப்பதற்கு சிறந்த வழி இறைவனின் வெளிப்பாடு அதிகம் உள்ள மனிதர்களை சேவையில் பூஜிப்பதே.



(தொடர்ச்சி 44ஆம் பக்கத்தில்...)

# பஞ்சதந்திரக் கதை

ஓர் ஊரில் அந்தணன் ஒருவன் நாள்தோறும் பிச்சை பெற்று வசித்து வந்தான். அவன் பெற்றுக் கொள்ளும் மாவில் பாதி மாவை உணவாக்கி உண்பான், மிகுதியாக உள்ளதை ஒரு பானையில் சேர்த்து வந்தான். அப் பானையை வீட்டில் ஒரு மூலையில் கட்டி வைத்திருந்தான்.

ஒருநாள் இரவு அவனுக்கு விழிப்பு வந்தது. அதன்பின் அவனுக்கு சரியாக நித்திரை வரவில்லை. ஆதலால் எழுந்து உட்கார்ந்து கொண்டு அந்த மா வைத்திருந்த பானையையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்நேரத்தில் அவன் மனத்தில் அநேக யோசனைகள் எழுந்தன.

## மனக்கோட்டை

இப்பொழுது இந்தப் பானையில் மா இருக்கிறது. இவ்வூரில் பஞ்சம் வரும் போது இம் மாவை விற்றால் 100 ரூபாய் கிடைக்கும். அப் பணத்தை வைத்து இரண்டு ஆடுகளை வாங்கலாம். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை இரண்டு ஆடுகளும் குட்டி போட்டுக் கொண்டே இருக்கும். அதனால் நம்மிடம் ஆட்டு மந்தையே சேர்ந்து விடும். அதை விற்றால் எருமைகள் வாங்கலாம். அவையும் நன்கு பெருகும். அவற்றை விற்றுக் குதிரைகள் வாங்கலாம். அவையும் குட்டி போட்டுப் பெருகும். அவற்றை விற்று ஒரு மாளிகை வாங்கலாம். பின் என் அந்தஸ்தைப் பார்த்துத் திருமணத்திற்காகப் பெண்கள் முன்வருவார்கள்.



அவர்களில் ஒருவரை நான் மணம் முடிப்பேன். பின் குதிரை லயம் ஒன்று வாங்குவேன். ஒரு வருடத்தின் பின் எனக்கு குழந்தை பிறக்கும். குழந்தை அழகாகத் தவழ்ந்து வரும். அதன் அழகைப் பார்த்துக் கொண்டே புத்தகம் படித்துக் கொண்டிருப்பேன். அவன் குதிரையிடம் செல்வான். அப்பொழுது என் மனைவி மகனைக் கவனிக்காது மா ஆட்டிக் கொண்டிருக்கிறாள் என எனக்கு கோபம் வரும். "என்ன பார்க்கிறாய்? குழந்தையை எடுத்துப் போ" என்று பேசுவேன். வீட்டு வேலையில் அதைக் காதில் போடாதவாறு இருப்பாள். எனக்கு மேலும் கோபம் அதிகமாகும். கோபத்தில் எழுந்து போய் அவளை நான் இப்படி உதைப்பேன், என்று நினைத்துத் தன்னை மறந்து காலால் ஓங்கி ஆத்திரத்துடன் உதைத்தான். அவ்வளவுதான், பானை உடைந்தது. மா எல்லாம் கீழே கொட்டியது. அவன் கண்ட கனவெல்லாம் சுக்குநூறானது. பகற்கனவு பலனளிக்குமா? **மனக்கோட்டை நன்மை பயக்காது. அதனால் தீமைதான் ஏற்படும்.**

தொகுப்பு: தே. சகானா
மாணவி (தரம் 10), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

## நீங்களும் எழுதலாம்.......


*அறநெறி அமுதத்தில் நீங்களும் எழுத விரும்புகிறீர்களா? அப்படியாயின் நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:*

மாணவர்களின் பண்பு வளர்ச்சிக்கும் ஆளுமை விருத்திக்கும் பயன்படக் கூடிய

1. கதை
2. கட்டுரை
3. படித்துச் சுவைத்தவை
4. கேட்டுச் சுவைத்தவை
5. உண்மைச் சம்பவங்கள்

ஆகியவற்றை எழுதி "அறநெறி அமுதம்" எனக் குறிப்பிட்டு முன் அட்டையில் உள்ள முகவரிக்கு அனுப்பவும். பொருத்தமான ஆக்கங்கள் உரிய திருத்தங்களுடன் பிரசுரிக்கப்படும். ஆக்கத்தை அனுப்பும்போது உங்களைப் பற்றிய விபரத்தையும் எழுதி அனுப்புங்கள். இதழாசிரியர்களின் முடிவே இறுதியானது.

# சாதனையாளர்




'பலர் தோல்வியில் துவண்டு விடும்போது ஒரு சிலர் வாழ்க்கையில் வெற்றி பெறக் காரணம் என்ன?' என்று நீங்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா? இதற்கு விடைகூறும் எழுபது வயதை உடைய விவேகானந்தரின் வீர இளைஞரைப் பற்றியே நாம் இந்த இதழில் அறிந்து கொள்ளப் போகிறோம்.

**எழுமின்! விழிமின்! குறிக்கோளை எட்டும்வரை அயராது உழைமின்!!**

"Arise, Awake, & stop not till the goal is reached" என்ற நூலினை எழுதிய ஒரு தமிழ் சாதனையாளர், உலக செல்வந்தர் பட்டியலில் 39ஆவது இடத்தைப் பிடித்த பெருமைக்-குரிய, இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட மகா சின்னத் தம்பியே அந்த விவேகானந்தரின் சிங்கக்குட்டி. வெறும் பொருளீட்டும் நோக்குடைய தொழில் அதிபரின் சரிதம் அல்ல அவரது வாழ்க்கை; மாறாக விழிப்புணர்வைத் தட்டி எழுப்பும் அனுபவம் சார்ந்த சரிதம்.

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட மகாவின் தந்தை வசாவிளானிலும் தாய் கொக்குவிலிலும் பிறந்தவர்கள். இவரது தந்தை இராமகிருஷ்ண மடத்தில் அதிக ஈடுபாடும் தொடர்பும் கொண்டவர். மகா, சிறுவனாக இருக்கும்போது மலேசியாவில் சிறிய கிராமத்தில் வாழ்ந்தார். அங்கே மின்சாரமோ குடிநீரோ இல்லை. துரதிஷ்டவசமாக அவரது தந்தையோ சிறையில்! அவரது தாய் மிகவும் கஷ்டப்பட்டு மகாவைப் படிக்க வைத்தார். தனது இருபதாவது வயதில் பொறியியல் படிக்க அவுஸ்திரேலியா வந்த மகா சின்னத்தம்பி, 1971ஆம் ஆண்டு திருமணம் செய்து

அவுஸ்திரேலியாவின் 'பேர்த்'' நகரில் தனது வாழ்க்கையைத் தொடங்கினார். கடந்த இரண்டு தசாப்தங்களாக மகா சின்னத்தம்பியின் இடைவிடாத உழைப்பின் பயன்தான் இன்று அவரது இந்த உயர்நிலைக்குக் காரணம். இவை அனைத்துக்கும் மேலாக சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையிலும் செய்திகளில் இருந்தும் 10 கொள்கைகளை எடுத்துக் கொண்டு அதையே தம் ஆதாரமாகக் கொண்டு வெற்றி பெற்றதாக தனது சரிதை நூலில் தம் வெற்றியின் இரகசியங்களை விபரிக்கின்றார் இந்த மகா சின்னத்தம்பி. இவரின் 10 கொள்கைகளை நாமும் அறிந்து கொள்வோமா?



**1. ஒரு திட்டத்தை எடுத்துக்கொண்டு அதை உங்கள் வாழ்க்கை ஆக்குங்கள்.**

ஆம்; இதுவே இவரது வாழ்க்கை அநுபவம். அவரது கொள்கையின் அடிப்படையில் ஒரேயொரு திட்டத்தை வாழ்வின் நோக்கமாக மேற்கொண்டார். அதையே அல்லும்பகலும் கனவு கண்டார்; அதிலேயே தீவிரமாக ஈடுபட்டார். அப்படிச் செய்யும்போது தடைகள் வரத்தான் செய்தன. ஆனால் தடைகளைக் கண்டு தயங்காமல் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்தி வெற்றி கண்டார்.

**2. எழுமின்! விழிமின்!! குறிசேரும்வரை அயராது உழைமின்!**

தனது பன்னிரண்டாவது வயது முதல் சுவாமி விவேகானந்தரை ஆராதித்து வருபவர் இந்த மகா சின்னத்தம்பி. இவரது 32 ஆவது வயதில் மடத்தின் மூத்த துறவியான சுவாமி ரங்கநாதானந்தஜி ஒரு பெரும் மாற்றத்தைக் கொண்டுவந்தார். அவரின் ஆலோசனைப்படி சுவாமி விவேகானந்தரின் முழு நூல் தொகுதியையும் படிக்கும் பாக்கியம் கிட்டியதாக நினைவுகூருகிறார் இந்த மகா சின்னத்தம்பி. அன்றிலிருந்து "எழுமின்! விழிமின்!! குறிசேரும்வரை அயராது உழைமின்!" என்பதே மகாவின் மகா வாக்கியமானது.

**3. அயராது உழையுங்கள்.**

உழைப்பு ஒன்றே உயர்வுக்கு வழி. அதிஷ்டம், பணபலம் என்பன வேண்டும் என்று போலிக் குற்றச்சாட்டுக்களை கூறிவிடும் எமக்கு உழைப்பு மட்டுமே உயர்வுக்கு வழிகோலும் என்று உரத்துக் கூறுகின்றார் இந்த மகா.

**4. பயமில்லாமல் இருங்கள், கடினமானவற்றை அச்சமின்றிச் சந்தியுங்கள்!**


மகா, 1980ஆம் ஆண்டளவில் கட்டிட நிறுவனத்துறையில் ஈடுபட்டிருந்தபோது மாற்றங்களை ஏற்படுத்தியதால் பல முதலீட்டாளர்கள் வெளியேறினர். இதனால் பலத்த கடனுக்கு உள்ளானதுடன் நிறுவனம் வீழ்ந்து போகும் நிலையுண்டானது. மனந்தளராத மகா துணிவோடு நிலைமையை எதிர்கொண்டு கடின உழைப்பால் அனைத்துக் கடனையும் படிப்படியாக அடைத்துவிட்டார்.

**5. இருண்ட இரவுதான் பிரகாசமான விடியலைத் தரும்!**


மகா, தனது கல்லூரித் தேர்வுகளில் முதல் இரண்டு வருடங்கள் தொடர் தோல்வியைச் சந்தித்தார் என்றால் நம்புவீர்களா? ஆம்; அதை ஒப்புக்கொள்ளும் மகா, தனது தந்தையிடம் தான் தேர்வில் தோல்வியடைந்தமைக்கு மன்னிப்புக் கோரி அழுதபோது அவரது தந்தை கொடுத்த நம்பிக்கை வாசகமே "இருண்ட இரவுதான் பிரகாசமான விடியலைத் தரும்" என்கிறார். அந்த நம்பிக்கையே தொடர்ந்து முயற்சி செய்து பொறியியல் தேர்வில் வெற்றி பெற வழிவகுத்திருக்கிறது.

**6. எண்ணம், சொல், செயல் மூன்றிலும் தூய்மை தேவை.**

பல்வேறு பண நெருக்கடிகளும் கஷ்டங்களும் வந்த போதும் கூட இவை மூன்றிலும் தூய்மையைக் கடைப்பிடித்ததாலேயே அவற்றை மீறி வர முடிந்ததாகத் திடமாகக் கூறுகிறார் மகா.



**7. ஆயிரம் தடைகள் தாண்டி வருவதுதான் உண்மையான குணவியல்பு.**




எதற்காகவும் தோல்வியைக் காரணம் காட்டி இலக்கை விட்டுக் கொடுக்காதீர்கள். தனது வாழ்க்கையில் கண்ட நெருக்கடிகளையும் தோல்விகளையும் கண்டு மகா சின்னத்தம்பி தளர்வடைந்திருந்தால் இந்நிலைக்கு உயர்ந்து, சாதனை படைத்திருக்கமுடியுமா?

**8. அவரவருக்கென்று உள்ள திறமையைக் கண்டுபிடியுங்கள்.**

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திறமை இருக்கும். பல்வேறுபட்டவர்களின் பங்களிப்பு சரியான முறையில் பயன்படுத்தப் -பட்டால் வெற்றி நிச்சயம் என நம்பிக்கை தருகிறார் மகா.

**9. உன்னுடைய விதியை நீயே முடிவு செய்.**

தனது ஸ்ப்ரிங் பீல்ட் (Spring field) என்ற நிலச்செயற்-திட்டத்தைப்பற்றிக் கூறும் போது, “நாங்கள் அந்த நிலத்தை வாங்கும் போது அங்கு ஒரு சிறைச்சாலையைத் தவிர வேறு ஒன்றும் இருக்கவில்லை. ஆனால் எங்களுக்கு ஓர் அழகிய நகர் தெரிந்தது. இன்று அவுஸ்திரேலியாவின் மிகப் பெரிய தொழில் மாவட்டத்தை 390 ஹெக்டயரில் செதுக்கி இருக்கிறோம். எல்லோரும் வேண்டாம் என்று சொன்னாலும் கூட, நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்பது தெளிவாகத் தெரிந்தால் தயக்கம் தேவையில்லை; உங்கள் குரலுக்குச் செவி சாயுங்கள் என்று உறுதி கூறுகிறார் மகா.

**10. எல்லா சக்தியும் உன்னுள்தான் இருக்கிறது**

இலக்கை நோக்கிய தொடர்ச்சியான, தளர்வில்லாத முயற்சியும் மனவுறுதியும்தான் வெற்றிக்கு வழிகோலும். அதற்கான அத்தனை சக்தியும் நம்மிடமே உள்ளது என்று தன் வெற்றியின் 10 தாரகமந்திரங்களை நமக்குத் தருகிறார் இந்த மகா சின்னத்தம்பி.

ஆக்கம்: *அ. காயத்திரி*
பழைய மாணவி (அவுஸ்திரேலியா), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை



# கலியுக கற்பகதரு

பள்ளியில் பாடம் படிக்கும் பன்னிரண்டு வயதுச் சிறுவனான கதாதரன் உலகியல் வாழ்வின் நிலையாமையினை உணர்ந்து, இறைநாட்டம் ஒன்றே மனிதனுக்கு அவனது உண்மைத் தன்மையினை எடுத்துக்காட்டும் என நம்பினான். அவனது தீவிர இறைநாட்டத்தின் வெளிப்பாடான பாவசமாதி நிலையினைச் சென்ற இதழில் கண்டோம்.

இறைநாட்டத்தின் காரணமாக கதாதரனுக்கு ஏற்பட்ட அகமுகத் தேடல்கள் அவனது இயல்பு வாழ்க்கை முறையினை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. கதாதரனுக்கு அடிக்கடி ஏற்படும் பரவசநிலையினைக் கண்டு ஊர்மக்கள் வியந்தாலும் அவனது அன்பான அணுகுமுறைகள் அனைவரையும் அவனிடத்து ஈர்த்தன.

கதாதரனுக்கு நடிப்பு என்பது ஒரு கைவந்த கலை. தன் தாயோ அல்லது வேறு யாராவது கவலையுற்றிருப்பதைக் கண்டால் போதும், உடனே நகைச்சுவைப் பாத்திரமாகிவிடுவான். ஏதாவதொரு நாடகத்திலுள்ள நகைச்சுவைப் பகுதியை நடித்துக் காண்பிப்பான் அல்லது கிராமத்திலுள்ள யாராவது ஒருவரின் நடை உடை பாவனைகளை நடித்துக் காட்டிச் சிரிக்க வைத்துவிடுவான்.

கதாதரனின் நடிப்பாற்றலில் துர்க்காதாஸ்பைன் என்ற வணிகர் ஏமாந்தது ஒரு சுவையான சம்பவம்.

காமார்புகூரில் கதாதரனின் வீட்டுக்கு அண்மித்த பகுதிகளில் வணிகர்கள் வாழ்ந்துவந்தனர். அவர்கள் தங்களது வீட்டுப் பெண்களைப் பிறரது வீடுகளுக்குச் செல்வதற்கு அனுமதிப்பதில்லை. அதேபோல் அந்நிய ஆண்களைத் தங்களது வீட்டின் உட்புறத்திற்கு அனுமதிப்பதில்லை. அவ் வணிகர்களில்


ஒருவரான சீதாநாதர் கததாரனின் மீது மரியாதையும், அவனது ஒழுக்கத்தின் மீது அளவற்ற நம்பிக்கையும் கொண்டிருந்தார். இதன் காரணமாக அவர் தன் வீட்டுப் பெண்கள் கததாரனை வீட்டுக்கு அழைத்து வருவதையும் அவனது ஆடல்பாடல்களை இரசிப்பதையும் அவர் தடுப்பதில்லை. மேலும் சீதாநாத்தின் வீட்டுக்கு கததாரன் வரும் வேளையில் சீதாநாத்தின் அயல் வீட்டுப் பெண்களும் வந்து அவனின் ஆடல்பாடல்களை இரசிப்பர். இது அவ் வணிகர்களில் ஒருவரான துர்க்காதாஸ் பைன் என்பவருக்குப் பிடிக்கவில்லை. மேலும் அவர், தன் வீட்டுப் பெண்களை கததாரனின் ஆடல்பாடல்களைப் பார்ப்பதற்கு அனுமதிப்பதில்லை.



இதை அவர் ஒரு பெருமையாகவே கருதினார். 'தன் வீட்டுப் பெண்களையோ தன் வீட்டின் உட்புறத்தையோ பிறர் கண்டதில்லை' என சீதாநாதரிடமும் மற்றவர்களிடமும் பெருமையாகாவே கூறிக்கொள்வார். ஒரு நாள் துர்க்கதாஸ் இவ்வாறு கூறிப் பெருமையடித்துக்கொண்டிருக்கும்போது தற்செயலாக கததாரன் அங்கு வந்தான். அவர் அவ்வாறு கூறியது அவனுக்கு சவாலாக அமைந்து விட்டது. உடனே "ஐயா என்ன சொல்கிறீர்கள்? பெண்களை வெளியே விடாமல் வீட்டுக்குள் அடைத்து வைப்பதனாலோ பர்தா முறையினாலோ (முகத்தை மூடி உடையணிவது) பாதுகாத்துவிடமுடியுமா? ஒழுக்கத்தினாலும் பக்தியினாலுமே அவர்கள் தூயவர்களாக வாழமுடியும். சரி, அதை விடுங்கள். நான் விரும்பினால் உங்கள் வீட்டின் உட்புறப் பகுதிக்குச் சென்று உங்கள் வீட்டுப் பெண்களுடன் பழக என்னால் முடியும்" என்று கூறினான். துர்க்காதாஸ் செருக்குடன் "அதையும்தான் பார்ப்போம்" என்றார். கததாரனும் விடாமல் "அதையும்தான் பார்ப்போமே" என்று கூறிவிட்டுச் சென்றான்.

சில நாட்களின் பின்பு ஒரு நாள் மாலைப்பொழுதினில் நெசவாளிப் பெண் போன்று வேடமிட்டு, தழையத் தழைய சேலை அணிந்து, ஓரிரு ஆபரணங்களையும் கையில் வெள்ளிக் காப்புகளையும் அணிந்து கொண்டான். கையில் ஒரு கூடையும் எடுத்துக்கொண்டான். முக்காடிட்டிருந்த புடவையை, முகத்தைச் சற்று மறைக்கும்படி இழுத்துவிட்டுக்கொண்டான். பின்பு சந்தைப் பக்கத்திலிருந்து தயங்கிய நடையுடன் துர்க்காதாஸ் வீட்டிற்கு வந்துசேர்ந்தான்.


துர்க்காதாஸ் தன் சில நண்பர்களுடன் அளவளாவிக் கொண்டிருந்தார். கதாதரன் நேராக துர்க்காதாஸிடம் சென்று, தான் ஒரு நெசவாளிப் பெண் என்று அறிமுகம் செய்துகொண்டான். நூல் விற்பதற்காகப் பிற பெண்களுடன் சந்தைக்கு வந்ததாகவும், அவர்கள் தன்னை விட்டுவிட்டுச் சென்று விட்டதாகவும், அன்றிரவு மட்டும் அவர்கள் வீட்டில் தங்க அனுமதிக்கும்படியும் மிகவும் பணிவுடன் கேட்டான். துர்க்காதாஸ் அவனை நம்பிவிட்டார். இருப்பினும் சொந்தக் கிராமம் எது என்பவை போன்ற ஓரிரு கேள்விகளைக் கேட்டார். அதற்கெல்லாம் கச்சிதமாகப் பதிலளித்தான் கதாதரன். திருப்தியடைந்த துர்க்காதாஸ் அவனிடம் “சரியம்மா, கலங்கவேண்டாம். உள்ளே போ, அங்கிருக்கின்ற பெண்கள் உனக்குத் தங்க இடம் தருவார்கள்” என்று கூறினார். கதாதரனும் துர்க்காதாஸை வணங்கிவிட்டு வீட்டின் உட்புறத்திற்குச் சென்றான்.



துர்க்காதாஸின் வீட்டின் உட்புறம் சென்ற கதாதரன் அந்த வீட்டுப் பெண்களிடமும் இதே கதையைக் கூறி நம்பச் செய்துவிட்டான். பின்பு அவர்கள் கொடுத்த பொரியையும், இனிப்பையும் வாங்கிச் சாப்பிட்டவாறே அவர்களின் உரையாடல்களில் பங்குகொள்ளவும் செய்தான். பேச்சும் சிரிப்புமாக வெகுநேரமாகி விட்டது.

இருட்டி வெகுநேரமாகியும் கதாதரன் வீட்டிற்குத் திரும்பாததால் தாயார் சந்திராதேவி கதாதரனின் அண்ணனான இராமேசுவரரை அனுப்பினாள். இராமேசுவரரும் கதாதரன் வழக்கமாகச் செல்லும் வணிகக் குடியிருப்புக்குச் சென்று 'கதாயி! கதாயி!' என உரத்த குரலில் கதாதரனை அழைக்கலானார். அண்ணனின் குரலைக்கேட்டதும் அதிர்ச்சியடைந்த கதாதரன் தான் இருக்கும் நிலமையை மறந்து, "இதோ வருகிறேன் அண்ணா" என்று கூவிக்கொண்டே வீட்டின் உட்புறத்திலிருந்து ஓடிவந்தான்.

வீட்டிற்குள் இருந்தவாறு 'அண்ணா' என நெசவாளிப்பெண் குரல்கொடுத்தவாறே ஓடிவந்ததும் துர்க்காதாஸுக்கு ஒன்றும் விளங்கவில்லை. சிறிது நேரத்தின் பின்புதான், கதாதரன் தன்னையும் தன் குடும்பத்தினரையும் நன்றாக ஏமாற்றிவிட்டதை உணர்ந்தார்! முதலில் கதாதரன் மீது கோபம் கொண்டாலும் பின்பு அவனின் நடிப்பாற்றலை மெச்சவும் செய்தார்.



தான் எடுத்த காரியங்களில் வெற்றிபெற, முழுச் சிரத்தை காட்டுவது என்பது கதாதரனின் வழமை. எனவே அவனின் கச்சிதமான நடிப்பாற்றலில் வணிகர் ஏமாந்தது ஒரு புதினமல்ல. அடுத்துவரும் இதழ்களில் கதாதரனின் வாழ்க்கைச் சம்பவங்களூடு தொடர்ந்து பயணிப்போம்.

ஆக்கம்: உ. சசிதரன்
பழைய மாணவன், இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை


# யோகம்

கடந்த இதழில் சூரியநமஸ்காரத்தைப் பற்றிய விளக்கத்தைப் பார்த்தோம். அத்துடன் அதன் ஆரம்ப நிலையையும் பார்த்தோம். இந்த இதழில் முதல் இரண்டு நிலைகளையும் பார்ப்போம்.

<u>முதல் நிலை</u>

**செய்முறை:**

- கைகளைத் தோள்பட்டையுடன் சேர்த்து, நேராகத் தலைக்கு மேலே தூக்கவும். (கைகள் இரண்டும் ஒன்றையொன்று தொடாதவாறு இருத்தல் வேண்டும்.)
- இப்பொழுது, கைகள் இரண்டும் காது மடல்களைத் தொட்டவாறு இருக்க இடுப்பைப் பின் நோக்கி வளைக்கவும்.
- மனக் கண்களில், உடலின் முன் பகுதியில் ஏற்படும் முழு நீட்டிப்பினைக் கவனிக்கவும். இடையிலிருந்து தொண்டைக் குழி வரை நீட்டித்த அதே வேளையில், உடலின் பின்புறத் தண்டு வடத்தில் ஏற்படும் மடங்கலை மனதில் கூர்ந்து கவனிக்கவும்.



**சுவாசநடை:**

நீண்ட உள் மூச்சு (கைகளை மேலே உயர்த்தி பின்னே வளையும் வரை மூச்சை உள்ளிழுக்க வேண்டும்.)

**நுண்ணியவிடயங்கள்:**

கால் மற்றும் கை மூட்டுக்களை மடக்குதல் கூடாது. தோள்கள் காது மடல்களைத் தொட்டபடி இருத்தல் அவசியம்.

**பலன்கள்:**

* நுரையீரல் கூடுகள் நீட்டித் தளர்த்தப்படும்.
* தண்டுவடத்திற்கு வளையும் தன்மை அதிகரிக்கும்.

* வயிறு, நெஞ்சு, முன் கைகள் மற்றும் தோள்கள் வலமை பெறும்.

* அர்த்தச்சக்ராசனம் எனும் யோகாசனத்தின் பலன்களையும் இந்நிலையில் கூடுதலாகப் பெறமுடியும்.

<u>இரண்டாம்நிலை</u>

**செய்முறை:**

- முள்ளந்தண்டு நேராக இருக்கும்படி மேலுள்ளவாறு முதலாவது நிலையில் நிமிர்ந்து நிற்கவும்.
- வெளிமூச்சு விட்டபடி உடலை முன் நோக்கி வளைக்கவும்.
- உச்சந்தலை தரையை நோக்கியவாறு கவிழ்ந்து, உள்ளங்கைகளால் பாதங்களின் அருகாமையில் தரையைத் தொடவும்.
- முழங்கால்களை ஒட்டியபடி முகத்தைக் கொண்டுவரவும்.



**சுவாசநடை : வெளிமூச்சு**

**நுண்ணியவிடயங்கள்:**

உடலை முன் நோக்கி வளைக்கும் போது தோள்கள் காது மடல்களைத் தொட்டபடி வளைக்கவும்.

முழங்கால்களை வளைக்காமல் உடல் வளைய வேண்டும்.

கடுமையான வலி உணர்வின்றி இயலுமானவரை உடலை வளைத்தால் போதுமானது.

**பலன்கள்:**

* தண்டுவடம் வளையும் தன்மையடையும்.
* வயிற்று நாளங்கள் சிறப்பாகச் செயற்படும்.
* ஜீரண (சமிபாட்டு) மண்டலம் வலிமைபெறும்.

* முகத் தசைகளுக்கும், கண்கள், மூளை போன்ற உறுப்புக்களுக்கும் இரத்த ஓட்டம் அதிகரிக்கும்.

* நரம்பு மண்டலம் தூண்டி விடப்படுவதன் மூலமாக நல்ல நினைவாற்றலும் ஆழ்ந்த கவனமும் கிடைக்கும்.

**முக்கியகுறிப்புக்கள்:**

சூரியநமஸ்காரம், வெறும் வயிற்றில் செய்யப்படவேண்டும். அதனால் அதிகாலையில் காலைக்கடன்களை முடித்தபின்பு சூரிய உதயத்தினை ஒட்டியநேரம் மிகவும் சிறந்தது.

குடலிறக்கம், இரத்தக் கொதிப்பு, தண்டுவடப் (முள்ளந்தண்டு) பிரச்சினைகள் போன்றவற்றால் அவதிப்படுவோர், குடும்பமருத்துவர் மற்றும் தகுதிவாய்ந்த ஒருயோகாசன ஆசிரியரிடம் கலந்தாலோசித்த பின்பு செய்தல் சிறந்தது.


தொகுப்பு: இ. பிரகலாதன்
பழைய மாணவன் (தொண்டராசிரியர்), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

**கடந்த இதழில் பிரசுரமான குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள்**


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வா | 2 சு | தே | வா | ய | 3 மா |
| ச | தி | ■ | ணி | 4 பி | ன |
| ச | ரா | 5 தெ | 6 து | ர | ஸ |
| ன | ம் | ங் | ரு | யா | ரோ |
| ம் | ■ | கு | வ | கை | வ |
| 7 கு | பே | ர | ன் | ■ | ர் |

# பிரம்மச்சரியத்தின் ஆற்றல்




5 மடத்திற்குத் திரும்பியபின்...
இது எப்படிச் சாத்தியமாயிற்று?
நான் எதையும் ஒவ்வொரு வார்த்தையாகப் படிப்பதில்லை. ஒவ்வொரு வாக்கியமாக அல்லது பந்தி பந்தியாகப் படிக்க என்னால் முடியும். அதனால்தான் விரைவாகப் படிக்க முடிகிறது.
6 இதைப்போன்ற சம்பவம் பிற்காலத்திலும் நடைபெற்றது. மடத்தில் இருந்த கலைக்களஞ்சியங்களை (encyclopaedia) வாசிக்கத் தொடங்கியிருந்தார் சுவாமிஜி.
அப்பப்பா! இத்தனை பகுதிகளையும் படிக்க ஓர் ஆயுட்காலம் போதாது
ENCYCLOPEDIA
ENCYCLOPEDIA
நான் ஏற்கனவே பத்துப் பகுதிகளைப் படித்து விட்டேனே! நீ என்ன கேள்வி கேட்டாலும் என்னால் பதில் சொல்ல முடியும்.
7 சரத் கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் நூலில் இருந்த அதே வாக்கியங்களை ஒப்பித்தார் சுவாமிஜி. ஆச்சரியமடைந்த சரத்...
ஓ! இது மனித சக்திக்கு அப்பாற்பட்ட விஷயம்!
ENCYCLOPEDIA
ENCYCLOPEDIA
இதில் வியப்பு என்ன இருக்கிறது! இதில் அற்புதம் எதுவும் இல்லை. மனித சக்திக்கு அப்பாற் பட்டதும் இல்லை.
8 முற்றிலும் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்கின்ற ஒருவன் ஒன்றை ஒரு முறை கேட்டால் போதும், படித்தால் போதும், அதனை அப்படியே ஒப்பிக்க அவனால் முடியும். எத்தனை வருடங்கள் கழிந்தாலும் அது மறக்காது. இந்தப் பிரம்மச்சரிய ஆற்றலை இழந்ததால் தான் நமது நாடு நாளுக்கு நாள் ஆற்றலிலும் அறிவிலும் பலவீனமாகிக் கொண்டு போகிறது.
ஆக்கம்: சி. கிருஷாந்தினி
பழையமாணவி (தன்னார்வத்தொண்டர்),
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை


# சுவாமி விவேகானந்தரின் வாழ்வில் பரமஹம்சர்



'கடவுளை யாரும் கண்டதுண்டா?' என்ற கேள்வியுடன் தன் தேடலைத் தொடங்கிய இளைஞன்தான் இன்று நாம் போற்றிக் கொண்டாடும் 'சுவாமி விவேகானந்தர்'. நவநாகரிக இளைஞர்களின் பகுத்தறிவுச் சிந்தனைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துபவராக நரேந்திரன் (சுவாமி விவேகானந்தர்) தன் இதயத்தில் எழுந்த கேள்விகளுக்குப் பதில் தேடுகையில் இவ் உலகம் கண்ட அனைத்து அவதாரங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துபவராக பரமஹம்சர் நரேந்திரனுக்குப் பதிலளித்தார். "நான் கண்டிருக்கிறேன்; உன்னாலும் காண முடியும்" என்று புதிய பாதையில் நரேந்திரனை நடக்க வைத்தவர் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்.

தர்க்கரீதியான கருத்துக்களை விவாதிக்கும் தன்மையுடைய நரேந்திரனுக்கு உணர்வுபூர்வமான ஆன்மீக அனுபவங்களை அடையும் வழியை உபதேசித்தார் பரமஹம்சர். இதனால் நரேந்திரனின் வாழ்வு, தன் புதிய பரிமாணத்தை ஆரம்பித்தது. என்னவென்றே தெரியாத மூடப் பழக்கங்களைப் பின்பற்றுபவரல்லர் நரேந்திரன். தன்னை குருவாய் ஆட்கொண்ட பரமஹம்சரையே ஆரம்பச் சந்திப்புகள் தொடக்கம், அவரது மரணப் படுக்கை வரையில் தொடர்ந்து பரிசோதித்தார்.

குரு, தன் சீடரைப் பரிசோதிப்பதைக் கேள்விப்பட்டிருப்போம். ஆனால், சீடன் குருவைச் சோதிப்பதை நரேந்திரனின் வாழ்வில்தான் காண்கிறோம். பரமஹம்சரோ நரேந்திரனின் இத்தகைய பரீட்சைகளால் சினமடையவில்லை; மாறாக அவரது 'உண்மையை அறியும் ஆவலை' மெச்சி அவருக்கேற்ற வழிகளில் ஆன்மீகப் பாதையில் வழிநடத்தினார். இவ்வாறு சீடனுக்கேற்ற குருவாக வந்தமைந்தார் பரமஹம்சர்.



மரணப் படுக்கையில் பரமஹம்சர் இருந்தபோதுங் கூட நரேந்திரன் அவரைச் சந்தேகித்தார். 'இவர் உண்மையிலேயே கடவுள் தானா?' என்று அவரது சிந்தனை எழுந்ததுமே, பேசக் கூடச் சக்தியற்றுப் படுத்திருந்த பரமஹம்சர் 'யார் இராமனோ, யார் கிருஷ்ணனோ, அவரே இராமகிருஷ்ணர்' என்று திருவாய் மலர்ந்தார். சீடனின் உள்ளத்தில் எழும் சந்தேகங்களைப் புரிந்து கொண்டு அதைத் தெளிவிக்கும் திறன் அவருக்கு இருந்தது. அத்துடன் தனது இறுதிக்காலம் நெருங்குவதை உணர்ந்த பரமஹம்சர் நரேந்திரனை அழைத்து, அவரைத் தொட்டு ஆசீர்வதித்தார். இதன்போது தான் இதுவரை காலமும் செய்த சாதனைகளின் பலனை எல்லாம் நரேந்திரனுக்கு சக்திப்பரிமாற்றமாய் வழங்கினார். "நரேன், இதுவரைநான் செய்த தவம், சாதனைகளின் பலனையெல்லாம் உனக்கு அளித்துவிட்டு நான் பிச்சைக்காரனாகிவிட்டேன்" என்று கூறினார்.

பரமஹம்சர் மகாசமாதி அடைவதற்கு முன் நரேந்திரனுடன் தனிமையில் சில மணி நேரம் உரையாடினார். இதன்போதே நரேந்திரன் எதிர்காலத்தில் செய்ய வேண்டிய பணி என்னவென்று பரமஹம்சர் எடுத்துரைத்திருக்கவேண்டும். இன்றைய இராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடத்தின் பணிகள் எல்லாம் சுவாமி விவேகானந்தரின் வழிகாட்டலுக்கமைய ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்படுபவை. எனினும் 'இவற்றைப் பற்றிய ஆரம்ப சிந்தனைகள் பரமஹம்சரிடமிருந்தே வெளிப்பட்டிருக்க வேண்டும்; நரேந்திரனுடனான இறுதி உரையாடலில் அவர்கள் இதைப்பற்றித்தான் கதைத்திருக்க வேண்டும்' என அறிஞர்கள் கருதுகின்றனர்.

குருதேவர் ஸ்ரீ இராமகிருஷ்ணரது மகாசமாதிக்குப் பின்னர் அவரது சீடர்கள் சுவாமி விவேகானந்தரையே தங்கள் தலைவராகக் கொண்டனர். சில கருத்துவேறுபாடுகள் எழுந்தபோது அன்னை சாரதையே 'நரேன் என்ன கூறுகிறானோ அதுவே குருதேவரின் விருப்பாக இருக்கும்' என்று கூறினார். அத்துடன் அன்னை ஒருமுறை ஆன்மிக உணர்வில் திளைத்த போது குருதேவர் கங்கையில் கரைவதாகவும் நரேந்திரன் அந்த நீரை எடுத்து மக்கள் மீது தெளிப்பதாகவும் ஒரு காட்சியைக் கண்டார். அதன் பின்னரே நரேந்திரன் 'சுவாமி விவேகானந்தராக' உலகமெங்கும் சுற்றி வேதங்களின் சிம்ம நாதத்தை முழங்கினார்.



சிகாகோவில் சுவாமி விவேகானந்தர் 1897

ஆக்கம்: சி. சாம்பவி
தரம் 11, இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை



# புராணச் சிறுவர்

## சுதாமர்

சுதாமர் என்ற இயற்பெயர் கொண்ட குசேலர் சிறுவயதிலேயே கிருஷ்ணரின் நண்பர். சிறுவயதில் நண்பர்கள் கூடி விளையாடும் போது ஒவ்வொருவரும் தத்தம் வீடுக-ளில் இருக்கும் உணவுகளை எடுத்து வந்து அனைவரும் பகிர்ந்துண்டு மகிழ்வர். அன்றும் வழமைபோல் விளையாடி முடிந்ததும் அனைவரும் உணவு உண்ணத் தயாராகினர். அந்த வேளையில் கிருஷ்ணனின் நண்பர்கள் பலர் தாம் கொண்டு வந்த பண்டங்களின் சிறப்பை எடுத்துக் கூறிக்கொண்டிருந்தனர். அப்போது சுதாமர் மட்டும் அமைதியாக நின்றான். அதற்கு அவனது நண்பர்கள் “என்ன? இன்றும் அதே பழங்கஞ்சிதானா சுதாமா?” என்று கேலி செய்தனர். அவர்களின் கேலியின்படியே சுதாமர் அன்று கொண்டுவந்திருந்ததும் பழங்கஞ்சியேதான். இதனால் மன வேதனையடைந்த சுதாமர் தான் கொண்டு வந்த பழங்கஞ்சியையும் எடுத்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு விலகிச்சென்றான்.



கைகளை ஆற்றிலே சுத்தம் செய்து விட்டு சாப்பிடத் தயாராக வந்த கண்ணன், சுதாமரை மட்டும் அவ்விடத்தில் காணவில்லை என்பதை அறிந்து கொண்டான். அவன் நடந்ததை ஊகித்துக் கொண்டான். கண்ணன் சுதாமரைத் தேடினான். நண்பர்களும் கண்ணனின் பின்னால் சென்றனர். சற்றுத் தொலைவில் ஒரு மரத்தின் பின்னால் அமர்ந்து சுதாமர் என்னவோ செய்து கொண்டிருந்தான். அருகில் சென்று பார்த்தால், சுதாமர், தான் கொண்டு வந்த கஞ்சியைத் தனியாகக் குடித்துக் கொண்டிருந்தான்.





அவனருகில் சென்ற கண்ணன், "கள்ளா! எனக்குக் கொடுக்காமல் நீ மட்டும் உண்கிறாயே" என்று அன்பு கலந்த அதட்டலுடன் கேட்டான். அதற்கு சுதாமர், "இல்லை கண்ணா! இது...... பழைய கஞ்சி....." என இழுத்தான். அதற்குக் கண்ணனோ, "அதற்கென்ன? இங்கே கொடு பார்ப்போம்" என்று பழங்கஞ்சியை வாங்கி அருந்தினான். அதன் சுவையறிந்த கண்ணன், "ஆஹா! என்ன அருமையான சுவை சுதாமா! எனக்கு விலையுயர்ந்த பண்டங்களை விட அன்புடன் கொடுக்கும் சிறு துரும்பும் அமிர்தம்தான். நீ இனிமேல் எனக்கு மட்டுமென்றே தனியாகப் பழங்கஞ்சி எடுத்து வரவேண்டும்" என்று கூறினான். சுதாமரின் ஏனைய நண்பர்களும் தமது தவறை எண்ணி மன்னிப்புக் கேட்டனர். சுதாமர் தன் கவலையை மறந்தான். அனைவரும் மகிழ்ச்சியாக வீடு திரும்பினர்.



"வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல.. உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்ற சுவாமி விபுலானந்தரின் கவிதை வரிகளும் இதனையே வலியுறுத்துகின்றன. இறைவன் வேண்டுவது அன்பு நிறைந்த தூய உள்ளமே ஆகும்.

"எவன் ஒருவன் தூய்மையான மனத்துடன் எனக்கு ஒரு இலையோ, பூவோ, ஒரு சொட்டுத் தண்ணீரோ சமர்ப்பிக்கிறானோ அதை நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன்"

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -



ஆக்கம்: கு. சநாதனி
தரம் 11, இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

## பெண்ணே நீ மகத்தானவள்!

### -சுவாமி விவேகானந்தர்-

"பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா! பெண்மை வெல்கவென்று கூத்திடுவோமடா!" என்று பெண்மையைப் போற்றிப் பாடினார் பெருங்கவி பாரதியார். அந்தப் பெண்மையின் மகத்துவத்தை வேதகாலம் தொட்டே பேணி வந்தது நமது சனாதன தர்மம். பெண்மையின் மிகவுயர்ந்த இலட்சியமாகத் தாய்மையை வரையறுத்து, அந்தப் பெண்மையைப் போற்றுவதன் மூலம் லோகமாதாவாகிய பராசக்தியை வழிபட்டது இந்து சமயம். இந்து சமயத்தில் பெண்களுக்கு மிகவுயர்ந்த அந்தஸ்தாகிய தாய்மை ஸ்தானம் வழங்கப்பட்டு போற்றப்பட்ட புனித மரபை வேதகாலம் தொட்டே அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அதே போன்றே இலட்சியப் பெண்களுக்கு எடுத்துக்காட்டாக, வேதகாலப் பெண்களாகிய கார்க்கி, மைத்ரேயி முதல் பின்னர் வந்த ஆண்டாள், கண்ணகி மற்றும் மிக அண்மைக் காலத்தில் நம்மிடையே வாழ்ந்த தூய அன்னை ஸ்ரீசாரதாதேவி வரை எண்ணற்ற இலட்சியப் பெண்களைக் குறிப்பிடலாம்.



இவ்வாறான புனிதப் பெண்மையின் பாரம்பரியத்தைக் கொண்டிருந்த இந்து சமய வரலாற்றில் சமீப காலத்தில் நம்மிடையே தோன்றி வாழ்ந்த ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதாதேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோர் மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் பெண்மையின் மகத்துவத்தை உணர்த்தியுள்ளனர். பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பெண்கள் அனைவரையுமே காளியின் அருள் வடிவாகக் கண்டு வழிபட்டார். பெண்மையின் மிக உயர்ந்த இலட்சியமாகிய தாய்மைப் பண்பை முழுமையாக வெளிப்படுத்தி இலட்சியப் பெண்மைக்கு ஒரு நடமாடும் உதாரணமாகத் திகழ்ந்தார் அன்னை ஸ்ரீசாரதை. அவர் பெண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்தார் என்பதைக் குறிப்பிட்டு சகோதரி நிவேதிதை பின்வருமாறு எழுதுகிறார்:

"இந்தியப் பெண்மணியின் இலட்சிய நிறைவாக அன்னையை ஸ்ரீராமகிருஷ்ணர் கண்டார் என்றே எனக்குத் தோன்றுகிறது. இலட்சிய நிறைவு என்றால், அவர் பழைய தலைமுறையின் இறுதிச் சின்னமா? அல்லது புதிய தலைமுறையின் ஆரம்பமா?" ஆம்.



அன்னை சாரதை தனது வாழ்வில் வாழ்ந்து காட்டிய அந்த இலட்சியப் பெண்மையை விளக்கியும் அந்தப் பெண்மை மதிக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தியும் தனது சகோதரச் சீடரான சுவாமி சிவானந்தருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் (சுவாமி விவேகானந்தர்) பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "அன்னை சாரதா தேவி என்பவர் யார்?, அவரது வாழ்க்கையின் உட்பொருள் என்ன? என்பதை நீங்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை; உங்களுள் யாருமே புரிந்து கொள்ளவில்லை. படிப்படியாகத் தெரிந்து கொள்வீர்கள். சகோதரா, சக்தி இல்லாமல் உலகிற்கு முன்னேற்றம் கிடையாது. நமது நாடு அனைத்து நாடுகளிலும் கடைசியில் இருப்பது ஏன்? பலமிழந்து கிடப்பது ஏன்? நம் நாட்டில் சக்தி அவமதிக்கப்படுவதுதான் காரணம். இந்தியாவில் அந்த மகாசக்தியை மீண்டும் உயிர் பெற்றெழச் செய்வதற்கே அன்னை தோன்றியுள்ளார். அவரை ஆதாரமாகக் கொண்டு மீண்டும் கார்க்கிகளும் மைத்ரேகிகளும் உலகில் தோன்றுவர். சக்தியின் அருள் இல்லாமல் என்ன சாதிக்க முடியும்? தூய உணர்வுடன், சாத்வீக முறையில், தாய்மை எண்ணத்துடன் வழிபடுபவர்களுக்கு எந்த நன்மை தான் உண்டாகாது?" ஆம், இவ்வாறு உணர்ச்சி பொங்க எழுதிய சுவாமிஜி (சுவாமி விவேகானந்தர்) பெண்களின் முன்னேற்றத்தையே நாட்டின் முன்னேற்றமாகக் கண்டார். அதற்காகப் பல பணிகளைச் செய்த அவர் ஆண்களுக்குச் செய்ததைப் போலவே பெண்களுக்கும் தனியான அமைப்பை நிறுவி அதன் மூலம் பெண்களின் முன்னேற்றத்தை நிகழ்த்த அவாவினார்.

இதை அவர் எழுதிய கடிதங்கள் எமக்குத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. பால் வேறுபாடற்ற ஒரே ஆன்மாதான் அனைவருள்ளும் உறைவது என்ற உயரிய கருத்தின் மூலம் பெண்களுக்கும் ஆன்ம அனுபூதி சாத்தியமானதே என உலக அரங்கில் பறைசாற்றினார். பெண்கள் கல்வி பெற வேண்டும், அதன் மூலம் சுயவலிமை பெற்றவர்களாக, தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கக் கூடியவர்களாக, சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்ற உயிரூட்டும் செய்தியை வழங்கியதன் மூலமும் அந்தச் செய்தியை நடைமுறைப்படுத்துவதற்கு உத்வேகமளித்ததன் மூலமும் சீரழிவு என்ற அதல பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த பெண்ணினத்தைத் தூக்கி நிறுத்தினார் சுவாமி விவேகானந்தர்.



ஒரு நாட்டில் பெண்கள் மதிக்கப்படுவதன் அவசியத்தைக் குறித்துச் சட்டங்களை வகுத்த எமது பண்டைய சான்றோராகிய 'மனு' பின்வருமாறு குறிப்பிடுகினறார். "எங்கே பெண்கள் மதிக்கப் படுகிறார்களோ அங்கே தேவதைகள் மகிழ்ச்சி அடைகின்றனர். எங்கே பெண்கள் மதிக்கப் படவில்லையோ அங்கே எல்லாக் காரியங்களும் முயற்சிகளும் நாசமாகின்றன." பெண்களின் மகத்துவத்தைக் குறித்துத் தனது சீடரொருவருக்குக் கூறும்போது சுவாமிஜி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "பெண்களுக்குத் தரவேண்டிய முறையான மதிப்பைக் கொடுத்ததாலேயே எல்லா இனங்களும் மகத்தான நிலையை அடைந்துள்ளன. எந்த நாடு, எந்த இனம் பெண்களை மதிக்கவில்லையோ, அவை ஒருபோதும் சிறந்த நிலையை அடைந்ததில்லை. அடையவும் முடியாது. எந்த நாட்டில், எந்தக் குடும்பத்தில், பெண்களுக்கு மதிப்பில்லையோ, எங்கே அவர்கள் துயரத்தோடு வாழ்கிறார்களோ அந்த நாடும் குடும்பமும் உயர்வடைவதற்கான வாய்ப்பே இல்லை. எனவே அவர்களை முதலில் உயர்த்த வேண்டும்."

ஆக்கம்: அ. சம்பந்தன்
பழைய மாணவன், இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

பெண்ணே நீ மகத்தானவள் - மண்ணில்
பரம்பொருளின் உருவானவள்

பாரதத் தாய் பெற்ற மகள் பண்பாட்டில் சிறந்த மகள்
வரலாற்றை உருவாக்கும் தலைமுறை நீ (பெண்ணே நீ...)

மனம் வைத்தால் மலைகளும் உன் கைகளுக்குள் தூளாகும்
கணப்பொழுதில் நதிகளுமே திசைமாறிப்பாய்ந்து வரும்

மனம் வைத்தால் மண்ணதனில் அமிர்தமும் திரண்டுவரும்
வானமிங்கு பூமியுடன் விளையாட்டாய் ஒன்றிணையும்

அழிவற்றவள் நீ..........
அழிவற்றவள் நீ - உந்தன்
உயிரினிலே நின்றுலவும் பரம்பொருளின்
மகத்துவத்தை உணர்ந்திடுவாயே (பெண்ணே நீ...)

கண்களிலே கனலிருக்கும் அசைவினிலே புயலிருக்கும்
பொங்கிவரும் சினம் கண்டு பகைவரெங்கும் ஓடிடுவார்

மண்ணும் செந்நிறமாகும் மாமலையும் தாழ்ந்துவிடும்
சீற்றத்தின் உச்சியிலே தாண்டவம் நடம்புரியும்

உண்மையிலே நீ..........
உண்மையிலே நீ பெரும் சக்திகளின் முழுவுறுதிக் குரல்
கொடுத்து புதுயுகத்தை அடைந்திடுவாயே (பெண்ணே நீ...)

அண்டத்தில் வீரமகள் அக்கினியைப் போல் தீரமகள்
கட்டளைக்கு அடிபணிந்து காலம் கூட நின்று விடும்

உறுதி கொண்டு உழைத்தாலே சாதிப்பாய் எதையும் நீ
துணிவு கொண்ட உள்ளத்துடன் சிங்கமென எழுவாய் நீ

முயன்றாலே நீ..........
முயன்றாலே நீ - உந்தன்
முயற்சி எனும் பெரும் பலத்தால்
மண்ணுலகை விண்ணுலகாய் மாற்றிடுவாயே (பெண்ணே நீ...)

# நீங்கள் சிங்கங்கள்!

ஒரு பெண் சிங்கத்தைப் பற்றிய கதை உண்டு. அது கருவுற்ற ஒரு சிங்கம். அது ஒருசமயம் இரையைத் தேடி அலைந்து கொண்டிருந்த போது ஓர் ஆட்டு மந்தையைப் பார்த்தது. உடனே அதன்மேல் பாய்ந்தது. அந்த முயற்சியில் அது இறந்துவிட்டது. இறப்பதற்கு முன் அது ஒரு குட்டியை ஈன்றது.



தாயற்ற அந்தச் சிங்கக்குட்டியை ஆடுகள் வளர்த்தன. அந்தச் சிங்கக் குட்டி ஆடுகளுடனேயே வளர்ந்தது, புல் தின்றது, ஆடுகளைப் போலவே கத்தியது.

காலப்போக்கில் அந்த சிங்கக்குட்டி நன்கு வளர்ந்து பெரிய சிங்கமாக மாறியது. ஆனால் அது தன்னை ஓர் ஆடு என்றே எண்ணிக் கொண்டிருந்தது.

ஒருநாள் வேறொரு சிங்கம் இரை தேடிக் கொண்டு அங்கு வந்தது. அங்கே ஆடுகளுக்கு நடுவில் ஒரு சிங்கம் இருப்பதையும், அது ஆபத்து வரும் சமயத்தில் ஆடுகளைப் போலவே பயந்து ஓடுவதையும் கண்டு வியப்படைந்தது.

அது அந்த ஆட்டுச் சிங்கத்தை நெருங்கி, "நீ ஆடல்ல, சிங்கம்" என்று சொல்ல முயன்றது. புதிய சிங்கம் தன்னை நெருங்கும் போதே, 'ஆட்டுச் சிங்கம்' பயந்து ஓடியது. ஆகவே புதுச் சிங்கம் ஒரு நல்ல வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தது.

ஒருநாள் ஆட்டுச் சிங்கம் தூங்கிக் கொண்டிருப்பதை புதிய சிங்கம் பார்த்தது. உடனே அதை நெருங்கி, "நீ ஒரு சிங்கம்" என்று கூறியது.

அஞ்சி நடுங்கிய அந்த ஆட்டுச் சிங்கம், புதிய சிங்கம் சொல்வதை நம்பாமல், "நான் ஆடுதான்" என்று சொல்லிக் கொண்டே ஆட்டைப் போல் கத்தியது.



புதிய சிங்கம் ஆட்டுச் சிங்கத்தை ஒரு ஏரிக்கு இழுத்துச் சென்றது. பின்னர் அது ஆட்டுச் சிங்கத்தைப் பார்த்து, "தண்ணீரில் பார். நம் இருவருடைய உருவங்களின் பிரதிபலிப்பும் தெரிகிறது" என்று கூறியது.

ஆட்டுச் சிங்கம் ஏரி நீரில் தென்பட்ட இரண்டு பிரதி பிம்பங்களையும் ஒத்துப் பார்த்தது. பின்னர் புதுச் சிங்கத்தையும் தன்னுடைய பிம்பத்தையும் பார்த்தது. அடுத்த கணமே, தான் ஒரு சிங்கம் என்ற எண்ணம் அதற்கு வந்தவிட்டது. உடனே அது கர்ஜித்தது; ஆடுபோல் கத்துவது மறைந்துவிட்டது.




நீங்கள் சிங்கங்கள்; தூய்மையான எல்லையற்ற, முழுமையான ஆன்மாக்கள். பிரபஞ்சத்தின் சக்தி முழுவதும் உங்களுக்குள் இருக்கிறது. நண்பா, நீ ஏன் அழுது புலம்புகிறாய்? உனக்கு பிறப்போ இறப்போ இல்லை. நீ ஏன் அழ வேண்டும்? உனக்கு நோயோ துன்பமோ கிடையாது. நீ எல்லையற்ற ஆகாயம் போன்றவன். பல வண்ண மேகங்கள் அதன் மீது வருகின்றன. கண நேரம் உலவிவிட்டு மறைந்து விடுகின்றன. ஆனால் ஆகாயம் எப்போதும் மாறாத, மாசற்ற நீல நிறமாகவே இருக்கிறது.

மூலம்: விவேகானந்தர் சொன்ன கதைகள்

# இந்துவின் வாழ்க்கை இலட்சியம்

## - சுவாமி விவேகானந்தர் -

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது" என்பது அறமுணர்ந்த ஆன்றோர் வாக்கு. ஆம், மனிதப்பிறவி என்பது இகத்தில் பெறுதற்கரிய பெரும் பேறாகும். அந்த மனிதப் பிறவியின் மகத்தான அறுதி இலட்சியம் ஆன்ம அனுபூதி அடைதலே என்று வரையறுக்கிறது சனாதன தர்மம். அவ்வகையில் அவரவர் தனக்கென இயல்பாக அமைந்த கடமைகளை இறைவழிபாடாகச் செய்வதன் மூலம், படிப்படியாக அந்த இலட்சியத்தை நோக்கி முன்னேறலாம் என்கின்றன இந்து சாஸ்திரங்கள். அதனடிப்படையில் எழுந்ததே வர்ணாச்சிரம தர்மமாகும். அவரவர் தனது இயல்புக்கேற்ற கடமைகளைச் செய்ய வலியுறுத்துவதே அந்த வர்ணாச்சிரம தர்மத்தின் அடிப்படை நோக்கம். இவ்வாறு அவரவர் இயல்புக்கேற்றவாறு கடமைகளை வரையறுத்த இந்து சமயம் அவரவர் மனநிலையின் வளர்ச்சிக்கேற்ப வாழ்க்கைப் படிமுறைகளையும் வகுக்கத் தவறவில்லை. அவ்வகையில் உருவானவையே நான்கு ஆசிரமங்கள் ஆகும். அவை பிரமச்சரியம் எனப்படும் மாணவ நிலை, கிருஹஸ்தம் எனப்படும் குடும்ப வாழ்க்கை, வானப்பிரஸ்தம் எனப்படும் கடமைகளிலிருந்து விடுபட்ட ஓய்வுநிலை, சந்நியாசம் எனப்படும் துறவு வாழ்க்கை என்பனவாகும்.




இந்த நான்கு ஆசிரமங்களுக்குரிய கடமைகளையும் நியதிகளையும் வகுத்துள்ளனர் நமது ஆச்சாரியார்கள்.

பிரமச்சரிய தர்மத்தில் அறிவைத் தேடுவதும் பண்பு வளர்ச்சியும் கடமைகளாக உள்ளன. கிருஹஸ்த தர்மத்தில் அவரவர் தனக்கென இயல்பாக அமைந்த கடமைகளைச் செய்வதன் மூலம் உலகின் இன்ப துன்ப அனுபவங்களைப் பெற்று மன முதிர்ச்சியடைதல், வானப்பிரஸ்த தர்மத்தில் மனைவி மற்றும் குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை முடித்துவிட்டு சகலவிதமானபந்தங்களிலுமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு உயரிய துறவு வாழ்விற்காகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளல், துறவறத்தில் அனைத்துப் பந்தங்களையும் உதறிவிட்டு சந்நியாச உறுதிமொழி எடுத்துக் கொண்டு இறைவனை அடைவதற்காகத் தீவிர சாதனைகளில் ஈடுபடல் என ஒரு படிமுறை ஒழுங்கில் கடமைகளை விதிக்கின்றன சாஸ்திரங்கள். எவ்வாறாயினும் மனித வாழ்வின் அறுதி இலட்சியம் ஆன்ம அனுபூதியை அடைவதே என்பதையும், அதற்கு அனைத்தையும் துறந்தொழித்த சந்நியாச நிலை அவசியம் என்பதையும் உணர்த்தும் சாஸ்த்திரங்கள் அந்த நிலையை இந்தப் படிமுறைகள் வாயிலாகவோ அல்லது நேரடியாக-கவோ அடைய வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. இந்த சாஸ்திர உண்மையை சுவாமி விவேகானந்தர் தனது கடிதமொன்றில், “இறைவனை அடைவதற்கான மிக முக்கிய தேவை துறவு ஆகும்” என்று எழுதுகிறார். பாலபாடம் கற்கும் குழந்தைக்குப் பட்டக்கல்வி பற்றி அறிவுறுத்துவது பெற்றோர் வழக்கம். அவ்வாறு அறிவுறுத்தும்போது அந்தப்பாலகன் மனதில் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெறுதல் என்னும் உயர் இலக்கின் விதை தூவப்படுகிறது. பின்னர் உரிய காலம் வரும்போது அந்த இலக்கு அவனால் அடையப்படுகிறது.



சுவாமி விவேகானந்தர், வாழ்வில் எந்நிலையில் இருப்பவரும் பின்பற்றக் கூடிய வகையில் உயிர்காக்கும் செய்திகளை வழங்கியவர். ஆற்றலும் ஊக்கமும் பொங்கித் ததும்ப அன்றலர்ந்த மலர்களைப் போல் புத்துணர்ச்சியுடனும் உள்ளத் தூய்மையுடனும் விளங்கும் மாணவர்களுக்குரிய பண்புக் கல்வி

பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார் சுவாமிஜி: "சிறந்த குணத்தை உருவாக்குகின்ற, மனவலிமையை வளர்க்கின்ற, அறிவை விரியச் செய்கின்ற, ஒருவனை சொந்தக் காலில் நிற்கச் செய்கின்ற கல்வியே தேவை." ஆம், கல்வியின் மூலம் ஒரு மாணவன் பெறுகின்ற அறிவும், நற்பண்புகளும் அவனை வாழ்க்கைப போராட்டத்திற்குத் தயார் செய்வதாக, அதாவது அடுத்து வருகின்ற ஆச்சிரமங்களைச் செவ்வனே கடைப்பிடிக்கத்தக்க வலிமையைத் தருவதாகவும் அவனைச் சொந்தக் காலில் நிற்கச் செய்வதாகவும் அமைய வேண்டும் என விரும்பினார் சுவாமி விவேகானந்தர். இது போன்றே வாழ்வின் ஏனைய நிலைகளில் உள்ளவர்களுக்கும் ஏற்ற வகையில் அவரவர் இலட்சிய வாழ்க்கைக்குத் தேவையான சிந்தனைச் சுரங்கத்தை அவரது உயிரூட்டும் உரைகளில் காணலாம். வாழ்வின் நான்கு ஆச்சிரமங்களைக் குறித்தும், அவை ஒன்றிலிருந்து ஒன்று உயர்வு தாழ்வு கொண்டவையல்ல என்பது குறித்தும் சுவாமிஜி தனது கர்மயோகச் சொற்பொழிவுகளில் மிக விரிவாகக் குறிப்பிடுகின்றார்.



வீரத்தின் உருவமாக விளங்கி நூற்றுக்கணக்கான மேடைகளில் ஆன்ம விடுதலையின் அற்புதச் செய்தியை அழகுற முழங்கிய சுதந்திர சிம்மம்தான் சுவாமி விவேகானந்தர். அவர் தனது அகத்தில் கொழுந்துவிட்டெரிந்த உன்னதத் துறவுணர்வால் தூண்டப்பட்டு உள்ளத்தில் ஜொலிக்கும் விடுதலை வேட்கையுடன் "அடிமைத் தளைகளைத் தகர்த்தெறி" என ஆன்ம முழக்கம் செய்தார். சனாதன தர்மம் சத்தியத்தை அடைவதற்காய் வகுத்தளித்த இலட்சிய வாழ்வின் அதியுயர் நிலையாகிய துறவறத்தின் நியதிகளை நினைவுறுத்துவதற்காயும், உலக இன்பங்களைத் துய்ப்பதிலிருந்து விடுபட்டு தூய துறவின் ராஜபாதையில் வீறுநடை போட விழையும் வீரர்களை விழிப்புணர்த்துவதற்காயும், தியாகத்தின் திரண்ட வடிவமாகத் திகழ்ந்த அந்தத் தீரரால் வடிக்கப்பட்ட திவ்ய வரிகள் இவை.

துறவி என்பவன் இறைவனின் போர்வீரன். ஆன்ம விடுதலையை அடைவதற்காய் அவன் புரியும் சன்மார்க்கச் சமரில் விவேகமே அவனது போர் வாள். வைராக்கியம் அவனது உயிர்காக்கும் கவசம். நான்கு யோகங்களும் அவனது போர்ரதப் புரவிகள். துறவு அவனது யுத்த தர்மப் பிரதிக்ஞை. தியாகமும் சேவையும் அவனது இரு கண்கள். அவன் செல்வது வீரர்களுக்கே உரிய ராஜபாதை. ஆம், ஆன்ம சாம்ராஜ்யத்தின் ராஜபாதையில் விசையுறு பந்தினைப் போல் வீறு கொண்டவர்களாக அணிவகுத்துச் செல்வர் வீரத் துறவிகள். இது, சம்சார சாகரத்தின் சுழன்றடிக்கும் அலைகளாம் தளைகளைத் தகர்த்தெறிந்து வாழ்வின் அறுதி இலட்சியமாகிய ஆன்ம அனுபூதியை அடைய அணிதிரளுமாறு மனுக்குலம் மீது விடுக்கப்பட்ட அறைகூவல்.


**ஆக்கம்: அ. சம்பந்தன்**
பழைய மாணவன், இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

(14ஆம் பக்கத் தொடர்ச்சி...)



முனிவர்கள் மற்றும் ரிஷிகளின் பரம்பரையில் உதித்த கோடானு கோடி பேர் மிருகங்களுக்கு அடுத்த நிலையில் வாழும் அழிவுத்துன்பம் கண்டு இதயம் நொறுங்கினார் சுவாமிஜி. இளைஞர்களின் ஆற்றல் மீது எல்லையற்ற நம்பிக்கை கொண்ட அவர் இவ் அனைத்துப் பிரச்சனைகளுக்குமான தீர்வை இளைஞர்கள் மூலமே வழங்க எண்ணினார். அதன் பொருட்டு அவரின் மனத்தின் பால் உதித்த சங்கமே ஸ்ரீராமகிருஷ்ண சங்கம். ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் மக்கள் நலப் பணி ஊடாக இன்றும் உருவமற்ற குரலாக வாழும் சுவாமிஜியின் அழைப்புக்குச் செவி சாய்த்து அவர் தம் படைவீரர்களாகி, தன்னலமற்ற மக்கள் சேவை செய்து உய்வு பெறுவோமாக.

# இலங்கையில் சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த ஆண்டு சிறப்பு நிகழ்வுகள்



“விவேகானந்தரின் வாழ்க்கை” எனும் கருப்பொருளில் அமைந்த நாட்டிய நாடகம் அபிநயக்ஷேஷ்த்ரா நடனப்பள்ளி மாணவர்களால் 21-04-2013 அன்று கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி விவேகானந்தா நூற்றாண்டு ஞாபகார்த்த அரங்கில் மேடையேற்றப்பட்டது. அக் கலை நிகழ்விற்கு திருமதி. சாந்தி நாவுக்கரசன் (பணிப்பாளர், இந்து சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம்) அவர்கள் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்திருந்தார்.





30-04-2013 அன்று பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நீர்ப்பாசன மற்றும் வடிகால-மைப்பு அமைச்சர் திரு. டினேஷ் குணவர்த்தன அவர்களால் “Short Life of Sri Ramakrishna”, “Education”, “Tales and Parables of Ramakrishna” ஆகிய புத்தகங்களின் சிங்கள மொழிபெயர்ப்புகளின் இரண்டாம் பதிப்புகள் வெளியிட்டு வைக்கப்பட்டன. இந்நிகழ்வை இந்திய உயர்ஸ்தானிகர் H.E. அஷோக் K. காந்தா ஆரம்பித்து வைத்தார்.

சுவாமி விவேகானந்தரது 150ஆவது பிறந்த ஆண்டு நிகழ்வுகளுக்கு மகுடம் சூட்டும் வகையில் 07-06-2013 அன்று இலங்கை அரசாங்கத்தினால் விவேகானந்தரின் உருவப்படம் பொறிக்கப்பட்ட 25 ரூபா பெறுமதியுடைய தபால் முத்திரை



இலங்கையின் **மாண்புமிகு ஜனாதிபதி மஹிந்த இராஜபக்ஷ** அவர்களால் உத்தியோக பூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் இந்தியாவிலிருந்து வருகை தந்த கொழும்பு இராமகிருஷ்ண மிஷனின் முன்னாள் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தஜி, தற்போதைய தலைவர் ஸ்ரீமத் சுவாமி



சர்வரூபானந்தஜி உட்பட ஏனைய துறவிகள், பக்தர்கள், சமய பாடசாலை ஆசிரியர்கள், தொண்டர்கள் கலந்துகொண்டனர். அத்துடன் ஜனாதிபதியுடனான மதிய போசனத்திலும் கலந்துகொண்டனர்.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு சமய பாட-சாலை சங்கீத தொண்டர் ஆசிரியர்களினால் 13-11-2013 அன்று சுவாமி இராஜேஷ்வரானந்தஜி மஹராஜ் அவர்களின் தலைமையின் கீழ் 'சுவாமி விவேகானந்தா நுண்கலை மன்றம்' சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்றைய தினம் வாய்ப்பாட்டு மற்றும் பண்ணிசை வகுப்புக்கள் இராமகிருஷ்ண மிஷன் சுவாமி விவேகானந்தா நூற்றாண்டு ஞாபகார்த்த மண்டபத்தின் கட்டிடத் தொகுதியில் ஆரம்பிக்கப்பட்டன.



தொகுப்பு: பா. ஜெனனி

பழைய மாணவி (தொண்டர்), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை


## செய்திகள்



அறநெறி அமுதத்தின் 13ஆவது அமுதத்தின் 4ஆவது துளி 27.10.2013 அன்று திருகோணமலை - தமிழ்மொழிப் பணிப்பாளர் திரு. சி. சிவநிர்த்தானந்தா அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது.



02.11.2013 அன்று தீபாவளி தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

17.11.2013 அன்று கார்த்திகைத் தீபம் கொண்டாடப்பட்டது.




சிவன், விஷ்ணுவுக்கு உகந்த திருவெம்பாவை டிசெம்பர் 9 முதல் 18 வரை வீதி பஜனை, திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி பாராயணம், நாமசங்கீர்த்தனம் என்பவற்றுடன் அனுஷ்டிக்கப்பட்டது.



தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 161ஆவது ஜெயந்தி தினம் டிசெம்பர் 24ஆம் திகதி பூஜை, பஜனை, ஓமம், அர்ச்சனை என்பவற்றுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சமய பாடசாலை மாணவர்களால் 05.01.2014 அன்று அர்ச்சனை ஆரதியுடன் அனுஷ்டிக்கப் பட்டது.

அன்பைப் போதித்த இயேசு கிறிஸ்துவின் பிறந்த தினம் டிசெம்பர் 24ஆம் திகதி கொண்டாடப்பட்டது.



குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணர் கற்பக தருவாகி பக்தர்களுக்கு ஆன்மீக அனுபவங்களை வழங்கிய கற்பகதருதினம் 01.01.2014 அன்று கொண்டாடப்பட்டது.

விஷ்ணுவை வழிபடச் சிறந்த நாளாகிய வைகுண்ட ஏகாதசி 11.01.2014 அன்று அனுஷ்டிக்கப்பட்டது.

ஸ்ரீராமகிருஷ்ணரின் நேரடிச் சீடர்களான சுவாமி சுபோதானந்தர், சுவாமி விஞ்ஞானானந்தர், சுவாமி பிரேமானந்தர், சுவாமி சிவானந்தர், சுவாமி சாரதானந்தர் ஆகியோரின் ஜெயந்தி தினங்கள் முறையே நவம்பர் 14, 16, டிசெம்பர் 11, 28, ஜனவரி 6 ஆகிய தினங்களில் அனுஷ்டிக்கப்பட்டன.







சுவாமி விவேகானந்தரின் 'ஜீவ சேவையே சிவ சேவை' என்ற அறிவுரையை மையக் கருத்தாய்க் கொண்டு யாழ். உரும்பிராய் விவேகானந்த நலன்புரி நிலையத்தில் **இலவச ஆயுர்வேத மருத்துவ நிலையம்** ஒன்று டிசெம்பர் 29ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கொழும்பு மாவட்டத்தின் **சிறந்த அறநெறிப்பாடசாலைக்கான** விருது எமது சமயபாடசாலைக்கு 7.12.2013 அன்று வழங்கப்பட்டதைப் பெருமையுடன் அறியத் தருகிறோம்.



## உங்கள் கருத்து

இந்தப் படத்திலிருந்து நீங்கள் பெற்றுக் கொள்ளும் பாடம் என்ன? உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள். சிறந்த ஆக்கம் உரிய திருத்தங்களுடன் அடுத்த இதழின் 'படம் தரும் பாடம்' பகுதியில் பிரசுரிக்கப் படும்.



# படம் தரும் பாடம்

இந்தப் படத்தைப் பாருங்கள். இதன் மூலம் எங்கள் மனதில் என்ன தோன்றுகிறது? ஒரு சிறுவன், அதுவும் ஏழைப் பிச்சைக்காரச் சிறுவன், தனக்குக்கிடைத்த சிறிதளவு உணவில் ஓர் பகுதியை நாய் ஒன்றுக்கு வழங்குகிறான்.

இன்று உலகில் பலர், தாங்கள் பணக்காரராக வேண்டும் என்ற நோக்கத்தில் கருமியாக வாழ்கின்றனர். ஆனால் இச் சிறுவனோ தன்னுடைய தன்னலமற்ற மனதாலும் இரக்க குணத்தாலும் தனக்குக் கிடைத்த சிறிதளவு உணவில் ஒரு பகுதியை நாய்க்குக் கொடுக்கிறான். பசியில் இருப்பவனுக்கே பசியோடிருக்கும் இன்னொருவனுடைய வலி புரியும். அதுபோலத்தான் இவ் ஏழைப் பிச்சைக்காரச் சிறுவனும் அந்த நாயின் பசியை உணர்ந்து அதற்குத் தன்னுடைய உணவில் சிறிதளவு கொடுக்கிறான். இவனுக்கு உள்ள இரக்கமும் அன்பும் இன்று எம்மில் பலருக்கு சிறிதும் இல்லை.

இச் சிறுவனின் செயல் இன்றைய சமூகத்தில் போற்றத்தக்கசெயல். இன்று பல இடங்களில் ஒருவேளை உணவு, ஏன்? ஒருவாய் உணவு கூட இல்லாமால் எத்தனையோ பேர் இறக்கிறார்கள். இந்த ஏழைச் சிறுவனுக்கோ உணவுக்கு வழியில்லை. ஆனாலும் தனக்குக்கிடைத்த சிறிதளவு உணவையும் பசியோடு இருக்கும் நாயுடன் பகிர்ந்து கொள்கிறான். ஓர் ஏழைச் சிறுவனாலேயே இன்னோர் உயிருக்கு உதவ முடிகிறதென்றால் நம்மால் ஏன் முடியாது? நாமும் எமக்குக் கிடைக்கின்ற சிறிதளவு பணமோ, பொருளோ கொண்டு ஏழைகளுக்கு எம்மால் இயன்றவாறு உதவி செய்யலாமே?

ஆக்கம்: ர. ராகுல்
தரம் 9, இராமகிருஷ்ணமிஷன் சமய பாடசாலை

## பண்பின் நிர்மாணம்

ஒரு மனிதன் நல்ல எண்ணங்களையே எண்ணி, நற்செயல்களையே செய்துவந்தால் அவன் மனதில் நல்லவையே பதிந்து, அவை அவனையறியாமலேயே அதைப் போன்ற நல்லதைச் செய்ய அவனைத் தூண்டும். ஒரு மனிதன் ஏராளமான நல்ல செயல்களையும், ஏராளமான நல்ல எண்ணங்களையும் கொண்டிருந்தால் அவன் உள்ளத்தில் நல்லதையே செய்யவேண்டும் என்ற தவிர்க்க முடியாத போக்கு உண்டாகிறது.

அவனாகத் தீயவற்றைச் செய்யவேண்டுமென்று விரும்பினாலும் நன்மையின் மொத்த வடிவமாக உள்ள அவனது மனது அவனை அவ்வாறு செய்யவிடாது. அவன் பூரணமாக நற்சுபாவங்களின் வயப்பட்டிருகிறான். இவ்வாறு அமையும்போதுதான் ஒரு மனிதனின் நன்னடத்தையானது நிர்மாணிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. நீ உண்மையிலேயே ஒரு மனிதனின் நடத்தையைத் தீர்மானிக்க விரும்பினால் அவனுடைய அருஞ்செயல்களைக் காணாதே. ஒரு மனிதனின் மிகச் சாதாரணமான செயல்களையே கண்காணித்து வா. உண்மையில் அவைதாம் ஒரு பெரிய மனிதனுடைய உண்மையான நடத்தையை உனக்கு வெளிப்படுத்தும். நீ நல்ல நடத்தையை அமைத்துக்கொண்டு ஒளிமயமாகப் பிரகாசிக்கின்ற, என்றும் தூய்மையாக இருக்கும் உனது இயற்கையான சுபாவத்தைத் தெளிவுபடுத்து. மேலும் நீ காணும் ஒவ்வொருவரையும் அக்கண்ணோட்டத்துடனேயே காண்பாயாக.

—சுவாமி விவேகானந்தர்

அன்பளிப்பு ரூ. 10.00